இதழ் 229

# மண்

ஜேர்மனி / 2025

தை - மாசி / Jan - Feb



















## யேர்மனி மண் சஞ்சிகை 36 வது ஆண்டில் காலடிபதிக்கின்றது

(1990 - 2025)

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

## 35 வது ஆண்டை நிறைசெய்யும் உங்கள் மண் சஞ்சிகை.. கல்வி,கலை,இலக்கிய,சமூக சஞ்சிகை..-யேர்மனி (1990 - 2025) 229 இதழ்கள் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளமை மகிழ்ச்சி!..

1990ம்ஆண்டு தைப்பொங்கல் அன்று யேர்மனி-டியுஸ்பேர்க் நகரில் வெளிவர ஆரப்பித்த "மண்" என்ற பெயருடன் கல்வி, கலை, இலக்கிய,சமூக சஞ்சிகை (14.01.2025) முப்பத்தைந்தாவது (35) ஆண்டை நிறைவுசெய்து 36வது ஆண்டில் காலடி பதிக்கின்றது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

1990ல் கையெழுத்துப்பிரதியாக வெளிவர ஆரம்பித்து, தட்டச்சுக்கு மாறிப் பின்னர் கணனி வடிவாகி இன்றுவரை 229 இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. தொடர்ந்து வெளிவர அனைவரின் ஆதரவுகளை அன்புடன் எதிர்பார்க்கிறோம்.

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடு ஒன்றில் (யேர்மனி) சிறிய ஒரு தமிழ் சஞ்சிகை 35 வருடங்களாகத் தொடர்ந்து வெளிவந்த வரலாற்றுப் பதிவின் சாதனை மண்சஞ்சிகைக்கே உண்டு. இச்சஞ்சிகையால் பல நூற்றுக்கணக்கான தமிழ்ச்சிறார்கள் எழுதி வளர்ந்திருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான எழுத்தாளர்கள் எழுதி உயர்ந்திருக்கிறார்கள். பல ஆயிரம் வாசகர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்.

புலம்பெயர் தேசம் ஒன்றில் இருந்து சிறிய சஞ்சிகை ஒன்று பல கோடிக்கணக்கான நிதி உதவிகளை தாயகத்தின் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிவரும் முதலாவது தமிழ்ச் சஞ்சிகையாக தமிழுலகில் சாதனை படைத்து வெளிவந்து கொண்டிருப்பதற்கு வாசக உள்ளங்களின் மனிதநேயமே முக்கிய காரணமாக அமைந்தது என்றால் அது பெருமைக்குரிய விடையமாகும். அனைவருக்கும் பெரு நன்றிகள்..

தொடரும் தமிழ், இலக்கிய, எழுத்துப் பணிகளுடன் தாயக அகதிகள்,ஆதரவற்றோர், முதியோர், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு உதவும் நீண்டகாலப் பணிகள் தொடர உங்கள் ஆதரவுக்கரங்களை எதிர்பார்க்கிறோம். மனித நேய உதவிகளை வழங்கிவரும் நல்லுள்ளங்களுக்கும் எழுத்தாளப் பெருமக்களுக்கும் வாசக அன்புள்ளங்களுக்கும் பெரு நன்றிகள். வாசகர்கள், எழுத்தாளர்கள், நலன்விரும்பிகள், நட்புகள் அனைவருக்கும் தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துகள்!...



இலங்கைத்தீவின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் நாடு பல முன்னேற்றகரமாக முன்னேறி வருவதாகத் தெரிய வருகின்றது. சீனா, இந்தியா, நாடுகளும் உலக வங்கி, ஐரோப்பிய யூனியன், உலக நாணய சபை போன்ற தாபனங்கள் பெரும் நிதி உதவிகளை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும். புதிய ஜனாதிபதி அனுரா அவர்களின் லஞ்ச ஒழிப்பு வேலைத்திட்டம், கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டம், சிக்கன வேலைத் திட்டம் போன்ற பல முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களால் நாடு பாரிய முன்னேற்றம் கண்டுவருகின்றது. பல நாடுகளும் வரவேற்று உதவிகளை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நம்மட தமிழ்க்கட்சிகளும் ஒற்றுமையைப் போட்டுடைத்து இன்றும் தனித்தனியே பிரிந்துநின்று இந்தியாவிடம் ஓடிப்போய் முறையிடுவதும் கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளிடம் எடுத்துரைப்பதுமாக இருந்து தமது பதவிகளைப் பாதுகாப்பதிலும் சொகுசு வாழ்வு வாழ்வதிலுமே குறியாக இருக்கிறார்கள். தமிழ் அரசியல், கட்சி வேறுபாடுகளை விட்டு ஒட்டுமொத்தமாகக் கூடிப் பேசுவதற்குத் இவர்கள் தயாரில்லை. ஒருமித்த குரலில் எமது உரிமைகளை எடுத்துரைக்கத் தயாரில்லை. நமது நாட்டு அரச தலைவர்களோடும் அரசியல் கட்சிகளோடும் பேசி உரிமைகளை, சலுகைகளைப் பெறவோ இலங்கையில் வாழும் அனைத்து இனங்களும் சமத்துவமாக சம உரிமைகளுடன் வாழ்வது பற்றி எடுத்துரைக்கவும் ஒற்றுமைப்படாமல் இருக்கிறார்கள் முதல் நமது நாட்டுத் தலைவரோடே பேச வேண்டும் அதை விட்டு பிறநாடுகளிடம் ஓடிப்போய் பேசினால் எந்தவித பிரயோசனமும் இல்லை என்பதே யதார்த்தமாகும்.

அடுத்தது கடந்த 75 வருடங்களாக மாறி..மாறி ஆட்சிசெய்த சிங்களக் கட்சியிரும் தமது பழைய கொள்கைகள், முதலாளித்தப் போக்குகளிலிருந்து விடுபடாமல் மீண்டும் லஞ்சம், ஊழல், நிர்வாகச் சீர்கேடுகளை கொண்டுவர முயற்சிக்கிறார்கள். எந்தவிதப்பட்டும் அனுரா அரசை வீழ்த்த வேண்டும் என அனைத்து சிங்கள எதிர்க்கட்சிகளும் கங்கணம்கட்டி நிற்கின்றன.

அநுரா அரசு உறுதியாகத்தான் நிற்கின்றது. லஞ்சம், ஊழல் இல்லாத சிறந்த அரச நிர்வாக கட்டமைப்பைக் கொண்டுவருவதும் சகல இனங்களும் சரிசமமாக சகல உரிமைகளுடன் இலங்கையராகவே வாழலாம் என தனது முன்னெடுப்புகளைச் செய்துவருகின்றது. இதை வரவேற்கத்தான் வேண்டும் சுமார் 75 வருடங்கள் கறைபடிந்த அரசாட்சி நமக்குத் தேவையில்லை. லஞ்சம் ஊழலற்ற நாடே இன்றுதேவை. அந்தளவுக்கு சிங்கள மக்கள் மத்தியிலும் மனமாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.

ஆகவே நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டியது நம் அரசியல் தலைவர்களின் முக்கிய கடமையாகும். அனைத்து கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரே குரலில் ஜனாதிபதியுடன் பேசித் தீர்வை எட்டவேண்டும் என்பதே இன்றைய யதார்த்தமாகும். இவர்கள் ஒன்றுபட்டுக் குரல் கொடுப்பார்களா?..என்று பொறுத்திருந்து பார்ப்போம்!..

- ஆசிரியர் 18.01.2025

## சிறுவர் வட்டம்...




### ஆத்திசூடி...

### சக்கர நெறி நில்...

சக்கரத்தை உருட்டி விட்டால் என்ன செய்கிறது?..உன் வீட்டின் கூடத்தின் எல்லா இடங்களுக்கும் உருண்டு செல்கிறது இல்லையா?.. சக்கரம் என்ற சொல்லுக்கு ஆணை என்ற ஒரு பொருள் உண்டு. அரசனின் ஆணையைச் சக்கரம் என்று கூறுவார்கள். திருமாலின் கையிலுள்ள சக்கரமும் ஆணைப்படி நடக்கக்கூடியதுதானே. ஒரு நாட்டை ஆளுகின்ற அரசன் கட்டளையிட்டால் அது அந்த நாடெங்கும் பரவுகிறது. அதனால்தான் அரச ஆணைக்கும் சக்கரம் என்று பெயர். மன்னனின் ஆணைக்கு மக்கள் அடங்கி வாழவேண்டும். அப்படி ஆணைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தால்தான் நாட்டில் கொலை, களவு போன்ற குற்றங்கள் இல்லாமல் அமைதியாக இருக்கும். சனங்களும் சந்தோஷமாக இருப்பார்கள். ஆட்சி செய்வோரின் ஆணைகளுக்கு அடங்கி நடப்பதுதான் மக்களின் கடமையாகும்....

### சான்றோர் இனத்து இரு...

சான்றோர் என்று யாரைக் கூறுகிறோம்?..அறிவிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்ட பெரியோர்களைத்தான் சான்றோர் என்கின்றோம் இல்லையா?..சான்றோர் எனப்படுபவர் எப்போதும் நல்லதையே நினைத்து, பேசி நடப்பார்கள். இத்தகைய சான்றோருடன் நாம் சேர்ந்திருப்போமானால் நமது மனம் தீயவழியில் போகாது. நல்ல வழியிலேயே போகும். நல்லொழுக்கம் கொண்டவர்களாக வளருவோம். இப்படி நல்லவர்களாக வாழ்ந்தால் உலகோர் உன்னைப் போற்றுவார்கள், பாராட்டுவார்கள், மதிப்பளிப்பார்கள். இத்தகைய புகழ்வாழ்வு பெற நீங்கள் அறிவும், ஒழுக்கமும் நிறைந்த சான்றோர்களோடு அவர்கள் கூட்டத்தில் சேர்ந்து இருங்கள் என்கிறார் மூதாட்டியான தமிழ்ப்பாட்டி ஒளவை.

# நல்நெறிபற்றி........

- வி நந்தகுமாரன் -

## விழிப்பாயிரு செழிப்பாயிருப்பாய்

- அநாகரீகமான அதிகபேச்சைவிட சிந்தனை நிறைந்த சிறியபேச்சு சிறப்பு.
- ஆழமான தத்துவங்களும், அதிக அர்த்தங்களும் அடங்கியதே வாழ்க்கை.
- இருவரில் ஒருவராவது கோபத்தை தடுத்துத் தணித்தால், தகுந்த சமாதானம் கிட்டும்.
- ஈர்க்கப்படும் வேண்டாத தவறுகளால் இளம் சமுதாயம் தம்மை இழக்கிறது.
- உண்மை நிலைமைகளை உணர்ந்து கொடுக்கும்போது உயர்ந்த மனிதனாகிறாய்.
- ஊதியம் உயர்த்துவதற்கு உறுதுணை, உயர்ந்தோர் நட்பை தேடுவதேயாகும்.
- எந்தக் கஷ்டத்திலும் நீதியைத் தழுவிக்கொள், உனக்குள் நின்மதி தளைக்கும்.
- ஏமாற்றங்களை எதிர்கொள்ளும் வெற்றி மனப்பான்மை, எம்மை உயர்த்தும்.
- ஜனனத்திற்கும் மரணத்திற்கும் இடைப்பட்ட காலம், இறைவனால் இயக்கப்படுகிறது.
- ஒழுக்கமான பாதையில் சென்று, ஒரு ஒழுங்கு சீரான வாழ்வைப் பெறுங்கள்.
- ஓர் உயிரில் இன்னொரு உயிர் அன்பு செலுத்தும்போது, கருத்தொருமித்த காதலாகிறது.
- நெருக்கடியில் நொருங்காமல் நிலை தடுமாறாமல் நில்.
- பழிப்பதும் பழிவாங்குவதும், புதைகுழியில் புதையும்.
- மனித மனம் மாசுபடும்போது, மகிழ்ச்சி மாயமாக மறைகிறது.
- மனிதனை வெல்பவனை விட, மனத்தை வெல்பவன் மகா வல்லவன்.
- விபரீதமான விதண்டா வாதத்தால் வரக்கூடாத வேதனைகள் வரும்.
- அறிவிருந்தும் அதைப் பாவியாமல், அழிப்பதும், அழிவதும், அர்த்தமற்றது.
- தடுமாற்றமான பேச்சுக்கள் தலைவர்கள் மத்தியில் தலைக்குனிவைத் தரும்.
- பேசுவது பெரிதல்ல பிரச்சனைகளை பெரிதாக்குவதே மிகப்பெரிய தவறு.
- பிரச்சனை இல்லாமல் சமூகம் இல்லை, தீர்க்கப்படாமல் வாழ்ந்தவர்களும் இல்லை.
- பிரச்சனைகளைக் கண்டு பயப்படாதே, பயந்தால் அது உன்னை
- பிசைந்தெடுக்கும். சீறிய பிரச்சனையானாலும், தீர்ப்பதில் தீவிர கவனம் - செலுத்து, சீக்கிரம் தீரும்.
- நாம் செல்ல வேண்டிய பாதையை நாம் தான் சரிவர செப்பனிட வேண்டும்.
- புரியவேண்டியதை புரிந்து கொண்டால் மட்டுமே புகலிடம் புனிதமாகிறது.

# குதிரைக்காரன் பணக்காரனாகிய கதை...



பதிமூன்று வயதில் படிப்பு போச்சு.. வீட்டில் ஏழ்மை.. தொடர்ந்து பல நாட்களாக பசி... வேலை தேடித் தேடி அலுத்துப் போச்சு... ஒருநாள், பசியால் மயக்கமடைந்து ஒரு நாடகக் கொட்டகை வாசலில் சொருகும் கண்களுடன் அமர்ந்திருந்தான் அந்த சிறுவன்.

ஒரு பணக்காரர் குதிரையில் நாடகம் பார்க்க வந்தார். பையனிடம், " டேய் இங்கே கட்டிவிட்டு செல்லும் குதிரைகள் காணாமல் போகின்றன. நீ இதைப் பார்த்துக் கொள். வரும் போது காசு தருகிறேன்," என்றார்." ஆஹா இப்படி ஒரு வேலையா?" பையன் ஆர்வமாகத் தலையாட்டினான். தெம்புடன் எழுந்தான். நாடகம் முடிந்து பணக்காரர் வெளியே வந்தார். வெளியே நிற்பது தன் குதிரை தானா என்ற சந்தேகம் வந்து விட்டது. குதிரையைச் சுத்தப்படுத்தி, சேணத்தை பளபளப்பாக துடைத்து வைத்திருந்தான் பையன். சற்று அதிகமாக பணத்தை அவனிடம் நீட்டினார் பணக்காரர். சில்லறை கிடைக்குமென நினைத்தவனின் கையில் "பணம்" மகிழ்ந்தான்.

மறுநாள், நாடகம் பார்க்க வந்த மற்றவர்களும் குதிரையை அவனிடம் ஒப்படைக்க, அவற்றையும் பாதுகாத்து, சுத்தப்படுத்திக் கொடுத்தான். வருமானம் பெருகவே, குதிரை லாயமே அமைத்து, உதவிக்கு வேலைக்கு ஆள் அமர்த்தி முதலாளியாகி விட்டான்.

அதோடு விட்டானா... நாடகங்களையும் கவனித்தான். மிகப்பெரிய இலக்கிய மேதையாகி விட்டான். அந்தச் சிறுவன் தான், உலகப்புகழ் பெற்ற இலக்கியமாமேதை ஷேக்ஸ்பியர். மனிதர்களுக்கு எப்போது வேண்டுமானாலும் நல்ல நேரம் வரும். வருகிற சந்தர்ப்பத்தை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டால், குதிரைக்காரனும் குபேரனாகி விடலாம்.

**வாய்ப்புகளை பயன்படுத்துகின்றவர்கள் வெற்றிகரமாக வலம் வருகின்றனர்...**



# முல்லாவின் கதை

## இசைப்பயிற்சி

முல்லா பல கலைகளைக் கற்றவர் என்றாலும் இசையைப் பற்றி மட்டும் அவருக்கு சுத்தமாகத் தெரியவில்லை, இசையைப் பற்றியும் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார்.

அந்த ஊரில் இருந்த இசைக்கலைஞரை முல்லா தேடிக்கொண்டு சென்றுவிட்டார். இசைக் கலைஞரைப் பார்த்து பணிவுடன் தனது இசையார்வத்தை கூறி தாங்கள் எனக்கு இசைப்பயிற்சியளிக்க வேண்டுமென்று கேட்டார் முல்லா.

'அதற்கென்ன தாரளமாக உனக்கு இசையை கற்றுத் தருகிறேன் ." என்று கூறினார் இசைக் கலைஞர். "கலைஞரே! இசைப்பயிற்சி பெற நான் தங்களுக்கு எவ்வளவு கட்டணம் அளிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் கூறுங்கள் என்றார் முல்லா.

"நீங்கள் என்னிடம் இசைப்பயிற்சி பெறுவதாக இருந்தால் முதல் மாதம் அதற்கான கட்டணமாகப் பத்துத் தங்கக் காசுகள் கொடுக்க வேண்டும்.. இரண்டாவது மாதத்தில் ஐந்து தங்கக் காசுகள் தரவேண்டும் மூன்றாவது மாதத்தில் மூன்று தங்கக் காசுகள் தரவேண்டும், நான்காவது மாதத்தில் ஒரு தங்கக் காசு கொடுத்தால் போதும்.. இது தான் இசைப் பயிற்சியளிக்க தாங்கள் அளிக்க வேண்டிய கட்டண விபரம்.." என்றார் இசைக் கலைஞர். அதைக் கேட்டதும் முல்லா சொன்னார் "ரொம்பவும் மகிழ்ச்சி நான் நான்காவது மாதத்திலிருந்து இசைப் பயிற்சியைத் தொடங்குகிறேன்.." என்று கூறிவிட்டு விடைபெற்றார்.

# உலக தாய்மொழி தினம்!...

- **சாமினா சிவதாசன்** - Essen -

உலகில் பல மொழிகள் இருந்தாலும் ஒருவருக்கு அவரின் தாய்மொழி என்பது பின்னிப்பிணைந்த ஒன்றாகும். உங்களிடமிருந்து உங்கள் தாய்மொழியை யாராலும் பறிக்க முடியாது. மற்றைய மொழிகளை கற்றுக்கொண்டாலும் கூட தாய்மொழி மீதான பற்று அனைவருக்கும் அதிகமாகவே இருக்கும்.

ஒரு தாயிடம் இருந்து ஒரு குழந்தை கற்றுக்கொள்கின்ற மொழியினையே தாய்மொழி என்று அழைக்கின்றோம். எங்கு வாழ்ந்தாலும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் தாய்மொழி மிக முக்கியமான மற்றும் உணர்ச்சிகரமான ஒன்று ஆகும்.

இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிவினையைத் தொடர்ந்து, பாகிஸ்தான், மேற்கு, கிழக்கு என்று இரண்டு பகுதிகளாக இருந்தது. இதில், கிழக்கு பாகிஸ்தான், தற்போதைய வங்கதேசம். வங்க மொழி பேசும் மக்கள் அதிகளவில் வசிக்கும் கிழக்கு பாகிஸ்தானில், உருது மட்டுமே தேசிய மொழியாக இருந்தது. ஒரே மதத்தினராக இருந்தாலும், மேற்கு பாகிஸ்தானில் அதிகம் பேசப்படும் உருது மொழியானது, கிழக்கு பாகிஸ்தானில் திணிக்கப்படுவதை, மக்கள் ஏற்கவில்லை.

இதையடுத்து கிழக்கு பாகிஸ்தானில் தேசிய மொழியாக வங்க மொழியே வேண்டும் என்று 1952-ம் ஆண்டு மாசி 21ம் திகதி “வங்க மொழி இயக்கம்“ உருவானது. இதையடுத்து வங்க மொழி இயக்கத்தைச் சார்ந்த மாணவர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். காவல் துறையின் நடவடிக்கையால், மாணவர்கள் 4 பேர் உயிரிழந்தனர். போராட்டம் தீவிரமாக பரவியது. 1956ம் ஆண்டு, கிழக்கு பாகிஸ்தானில் தேசிய மொழியாக வங்க மொழி அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, டாக்காவில் நடைபெற்ற போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக ஆண்டுதோறும், மாசி 21ம் திகதியை உலக தாய்மொழி தினமாகக் கடைபிடிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை வங்கதேச அறிஞர் ரபீக்குல் இஸ்லாம் 1998ம் ஆண்டு யுனெஸ்கோவில் முன்மொழிந்தார். தாய்மொழிக்காக போராடி உயிரிழந்தவர்கள் நினைவாகவும், அனைத்து மக்களின் தாய்மொழி உரிமையைப் பாதுகாக்கும் வகையிலும், மாசி 21ம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக யுனெஸ்கோ 1999ம் ஆண்டு அறிவித்தது. இதையடுத்து 2000ம் ஆண்டிலிருந்து, மாசி 21ம் திகதி உலக தாய்மொழி தினமாக கொண்டாடப்படுகிறது.

நமது தாய்மொழி தமிழ். நம்மில் பலர் தாய்நட்டிற்கு வெளியே வாழ்ந்தாலும், தமிழ் மொழியே எமது அடையாளம். எத்தனையோ பிரச்சனைகள் இருந்தும் எங்கள் பெற்றோர்கள் எங்களுக்கு தாய்மொழியை தொட்டிலில் போட்டு எங்களை தமிழர்களாக வளர்த்தார்கள். இதை தாய்மொழி நாளில் நினைவு கூறி நம் தாய்மொழி தமிழை வாழ வைப்போம்.
"வாழ்க தமிழ் வளர்க தமிழ்"

.....................................................................................................................................

# நகுலின் குட்டிக் கதைகள் - 9

## சேர்ந்து வேலை செய்வோம்

எங்கள் வீட்டில் நடந்த குட்டிக் கதை. ஒரு பெரிய விருந்திற்கு வீட்டில் தயாரானோம் . பலர் ஒன்று கூடி வேலைகளை பகிர்ந்து செய்தார்கள். பகிடியான பேச்சுகள், கலகலப்பான சிரிப்புகளுடன் வேலை செய்தார்கள். பலர் கூடி செய்தமையால் குறைந்த நேரத்திற்குள் செய்து முடிதாதார்கள். எமக்கு பார்ப்பதற்கு மிகிழ்ச்சியாக இருந்தது. ஆளும் பேரும் சேர்ந்து வேலைகளைச் செய்தால் இலகுவாக முடிக்கலாம் என்பதை உணர்ந்தோம்.

ஆகவே கடினமான எந்த வேலையாக இருந்தாலும் சேர்ந்து, பகிர்ந்து வேலைகளைச் செய்வதால் அது இலகுவானதாகவும் சந்தோஷ மாகவும் இருக்கும் என்னும் பாடத்தை மாணவர்களாகிய நாம் கற்றுக் கொள்வோம்!..

**செல்வன் நகுல் துரையரங்கன்**
**எசன் - தமிழ் பாடசாலை.**

.....................................................................................................................................

**நல் மொழிகள்..**

1- எடுத்தால் குறைவது செல்வம்...கொடுத்தால் வளர்வது கல்வி..
2- விடா முயற்சியே வெற்றியின் திறவுகோல்..
3- வாழ்க்கையில் வெற்றிபெறத் தகுதி அவசியம்..

த - தன்னம்பிக்கை,
கு - குறிக்கோள்,
தி - திட்டமிடல்.

# வண்ணச் சிறகுகள்....

ஊரில் உள்ள சின்ன ஹோட்டல் ஒன்றில் , கையில் தூக்கு வாளியுடன் ஒரு 10 வயது சின்னக் குழந்தை "அண்ணா... அம்மா 10 இட்லி வாங்கி வர சொன்னாங்க... காசு நாளைக்கு தருவாங்களாம்" என்றது. ஹோட்டல் நடத்துபவர், "ஏற்கனவே கணக்கு நிறைய பாக்கி இருக்கு.... அம்மாக்கிட்டே சொல்லு... இப்போ வாங்கிட்டுப்போ... தூக்கு வாளியை தா சாம்பார் ஊத்தி தாரேன்" என்றார் ...

இட்லி பார்சலையும், சாம்பார் நிறைத்த தூக்கு வாளியையும் அந்த குழந்தையிடம் தருகிறார். குழந்தை, "சரி... அம்மாட்ட சொல்றேன்... போயிட்டு வரேன் அண்ணே.... " என்றபடியே குழந்தை சென்றுவிட்டான். அந்த கடையில் நான் வாடிக்கையாய் சாப்பிடுவது வழக்கம். ஆதலால் நான் கேட்டே விட்டேன்... "நிறைய பாக்கி இருந்தா ஏன் மறுபடியும் குடுக்குறீங்க....?" ஹோட்டல் முதலாளி "அட சாப்பாடு தானே சார்.... நான் முதல் போட்டுத்தான் கடை நடத்துறேன்.

இருந்தாலும் இது மாதிரி குழந்தைகள் வந்து கேட்கும்போது மறுக்க மனசு வரல சார்... அதெல்லாம் குடுத்துடுவாங்க... என்ன கொஞ்சம் லேட் ஆகும்.... எல்லாருக்கும் பணம் சுலபமாவா சம்பாதிக்க முடியுது? குழந்தை பசியால் கேட்டிருக்கும்.. அதான் சார், அனுப்பி இருக்காங்க.. நான் குடுத்துடுவேன் அப்டியான அவங்க நமபிக்கையை நான் பொய்யாக்க விரும்பல சார்.... நான் உழைச்சி சம்பாதிக்கிற காசு சார்... கட்டாயம் வந்துடும். அதுவும் இல்லாம இப்போதைக்கு அந்த குடும்பம் சாப்பிடுதுல, அதுதான் சார் முக்கியம்"

"நான் உணவு தரவில்லை என்றால் , அந்த குழந்தை , தன் தாய்க்காக திருட போவான்... அல்லது அந்த தாய் தன் குழந்தை பசிக்காக , தவறான பாதைக்கு செல்வாள்... ஆனால், என்னால் நான் நஷ்டபட்டாலும், இப்பொழுது நம் சமுகத்தில் நடக்க இருந்த, இரண்டு தவறுகளை தடுக்க முடிந்திருக்கிறது" என்றார் ஹோட்டல்காரர்.

பாக்கெட்டில் இருந்த பணம் அப்படி ஒன்றும் மதிப்பான விசயமாக தெரியவில்லை எனக்கு. நான் அன்று அளவாகத்தான் சாப்பிட்டேன் ஆனால் நிறைந்தது மனது....

**இறைவன் பூமியிலும் இருக்கத்தான் செய்கிறார் நமக்குத்தான் தெரிவதேயில்லை.....**






# தெரிந்துகொள்வோம்..

## Vocabulary.. சொல்வளம்

01 - Best - சிறந்த
02 - Fest - விழா
03 - Nest - கூடு
04 - Pest - பூச்சி
05 - Rest - ஓய்வு
06 - Test - தேர்வு, சோதனை
07 - Vest - பனியன்
08 - West - மேற்கு
09 - Zest - பேரார்வம்

## Read..........

01- Bot வழங்கல்
02- Cot கட்டில்
03- Dot புள்ளி
04- Fot புகைப்படம்
05- Got கடவுள்
06- Hot சூடான
07- Kot மலம்
08- Mot அறிவுத்துணுக்குரை
09- Not வேண்டாம்
10- Pot பானை
11- Tot இறந்தது
12- Brot ரொட்டி
13- Crot கொட்டை
14- Shot சுடப்பட்டது

## Full Forms Used in Daily Life

நாம் அன்றாடம் பாவிக்கும் ஆங்கிலச் சொற்கள் சில...

ATM - Automated Teller Machine
SMS - Short Message Service
SIM - Subscriber Identity Module
VIP - Very Important Person
PDF - Portable Document Format
KYC - Know Your Castomer
RAM - Random Access Memory
CPU - Central Processing Unit
USB - Universal Serial Bus
URL - Uniform Resource Locator
DNA - Deoxy Ribo Nucleic Acid
GIF - Graphics Interchange Format
MMS -Multimedia Messaging Service
VIRUS -Viral Information Resources Under Siege



## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 47

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 5 | 3 | | | | 4 | |
| | | | | 1 | 7 | | 6 | |
| 3 | | | | | | | | 5 |
| 9 | | | | 3 | | | | |
| | 3 | | | | 4 | | | |
| 4 | | | 2 | 7 | | 9 | 3 | |
| 7 | 8 | | | 5 | | 2 | | |
| | | | | 9 | 3 | 4 | | |
| | | 4 | | | | | 8 | 1 |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 140
## ( தை - மாசி 2025 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04 ஔவையார் அருளிய நூல்.
11-12 மரத்தில் கிடைப்பது.
13-15 இனிப்பான பழ மரம்.
வ-இ
06-05 மனித உறுப்புக்களில் ஒன்று
08-07 நம் சொந்த ஊரில் இதிலும் படுத்துறங்குவார்கள்.
16-15 ஊட்டச் சத்துள்ள குடிபானம்
கீ-மே
06-02 வீடுகட்டப் பயன்படுவது.
14-10 உழைப்போர் அரசாங்கத்துக்குச் செலுத்துவது.
மே-கீ
01-09 கடலில் வாழும் உயிரினம் ஒன்று.
03-15 ஐவகை நிலங்களில் ஒன்று.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## பிரசித்தி பெற்ற நூல்கள்....

01- சத்திய சோதனை - மகாத்மா காந்தி
02- இயேசுகாவியம் - கவிஞர்கண்ணதாசன்
03- தேம்பாவணி - வீரமாமுனிவர்
04- மகா பாரதம் - வேதவியாசர்
05- பெரிய புராணம் - சேக்கிழார்
06- இராமாயணம் தமிழ் - கம்பர்
07- பகவக்கீதை - வேதவியாசர்
08- இராமாயணம் வடமொழி - வால்மீகி
09- அர்த்த சாஸ்திரம் - சாணக்கியர்
10- திருப்புகழ் - அருணகிரிநாதர்
11- கீதாஞ்சலி - ரவீந்திர நாத் தாகூர்
12- திருவாசகம் - மாணிக்கவாசகர்
13- சிலப்பதிகாரம் - இளங்கோ அடிகள்
14- மணி மேகலை - சீத்தலைச்சாத்தனார்

**ஜெயா நடேசன் - ஜேர்மனி**

## ஆண்களின் ஏழு பருவங்கள்..

01 - 12 - பாலகன்
12 - 24 - விடலை
24 - 36 - காளை
36 - 48 - மீளி
48 - 60 - மறவோன்
60 - 72 - திறவோன்
72 மேல் - முதுமகன்

## மாணவர்என்றால் என்ன?..

Student Full Form...

S - Smart
T - Thoughtful
U - Understanding
D - Disciplined
E - Energetic
N - Notable
T - Talented

## தந்தை என்பவர் யார்?..

Father Full Form...

F - Faithful - விசுவாசமானவர்
A- Available - மனமுவந்து கொடுப்பவர்
T - Teacher - கற்பிப்பவர்
H - Helpful - உதவி செய்பவர்
E - Encourage -ஊக்குவிப்பவர்
R - Responsibilitiy - பொறுப்பானவர்

## தமிழர்களின் சிறப்புகள்..

9- நவதானியங்கள் ஒன்பது என நிர்மானித்தான்.
(நெல், கோதுமை, கொண்டல்கடலை, துவரம்பருப்பு, உளுந்து பாசிப்பருப்பு, கொள்ளு, எள், மொச்சை)
8- திசைகளை எட்டாகப் பிரித்தான்.
(வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, வடமேற்கு, வடகிழக்கு, தென்மேற்கு, தென்கிழக்கு)
7- இசையை எழாகக் கொடுத்தான்.
(ச, ரி, க, ம, ப, த, நி)
6- சுவையை (அறுசுவை) ஆறாகப் பிரித்தான்.
(இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு)
5- நிலத்தை ஐந்தாகப் பிரித்தான்.
(குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை)
4- காற்றை நான்காகப் பிரித்தான்.
(தென்றல், வாடை, கோடை, கொண்டல்)
3- மொழியை மூன்றாகப் பிரித்தான்.
(இயல், இசை, நாடகம்)
2- வாழ்க்கையை இரண்டாக வகுத்தான்.
(அகம், புறம்)
1- ஒழுக்கத்தை மட்டும் ஒன்றாக வைத்தான்.
அதை உயிரினும் மேலாக வைத்தான்.

.................................................................................................................................

## பதினாறு செல்வங்கள்....

| | | | |
|---|---|---|---|
| 01- துணிவு | 02- கல்வி | 03- ஆற்றல் | 04- வெற்றி |
| 05- நன்மக்கள் | 06- பொன் | 07- நெல் | 08- அறிவு |
| 09- பெருமை | 10- ஆயுள் | 11- நல்ஊழ் | 12- இளமை |
| 13- நோயின்மை | 14- நுகர்ச்சி | 15- பொருள் | 16- புகழ் |

.................................................................................................................................

## மறக்கக்கூடாத ஐந்து...

01- கற்று முடிந்த பிறகு குருவை மறக்கக்கூடாது.
02- மனைவியை அடைந்த பிறகு அன்னையை மறக்கக்கூடாது.
03- உதவியைப் பெற்றவர்கள் உதவியவர்களை மறக்கக்கூடாது.
04- கரையைக் கடந்தவர்கள் படகையும் படகோட்டியையும் மறக்கக்கூடாது
05- நோய் நீங்கியவர்கள் மருத்துவரை மறக்கக்கூடாது.

.................................................................................................................................

## வாழ்க்கைக் கணக்கு...

01- நல்லவற்றைக் கூட்டிக்கொள்ளுதல் ( + ) வேண்டும்.
02- தீயனவற்றைக் கழித்துக்கொள்ளுதல் ( - ) வேண்டும்.
03- அன்பைப் பெருக்கிக்கொள்ளுதல் ( X ) வேண்டும்.

# அடையாளங்கள்




| | |
|---|---|
| 1 day | 24 hrs |
| 1 Week | 7 days |
| 1 fornight | 14 days |
| 1 month | 30/31 days |
| 1 Year | 365 days |
| 1 Leap year | 366 days |
| 1 Year | 12 month |
| 1 decade | 10 years |
| Silver Jubilee | 25 years |
| Ruby Annviersary | 40 years |
| Golden Jubilee | 50 years |
| Diamond Jubilee | 60 years |
| Platinam Jubilee | 75 years |
| Centory | 100 years |
| Bicentennial | 200 years |
| Tercentennial | 333 years |
| Millennium | 1000 years |

**நாட்கள்**

**வருடங்கள்**

**பலவகை**

**உண்டு...**

# புதிர்ப்போட்டி....



| | | | | |
|---|---|---|---|---|
| | | 18 | 8 | 26 |
| | 31 | 7 | | 14 |
| 21 | 9 | | 30 | 22 |
| 15 | | 28 | 11 | |
| 12 | 10 | 29 | | |

**புதிர் - 1**

- சுடோக்கோ...ஒரே நேர் கோட்டில் ஒரே இனப்பொருட்கள் வரக்கூடாது.
- ஆறு சதுரங்களிலும் ஆறு பொருட்கள் இடம்பெற வேண்டும்..

**புதிர் - 2**

இதில் காணப்படும் சதுரத்திலுள்ள பெட்டிக்குள் வரவேண்டிய எண்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.. 7 தொடக்கம் 31 எண்களைப் பாவிக்கலாம். எந்தப்பக்கத்தால் கூட்டினாலும் விடை 95 வரவேண்டும்...

**விடைகள் இன்னொரு பக்கத்தில்....**

## திரும்பி வராதவை...

1- உடலைவிட்ட உயிர்...

2- பேசிவிட்ட வார்த்தை...

3- கடந்துவிட்ட நேரம்...

4- இழந்துவிட்ட இளமை...

5- தவறவிட்ட கல்வி

## ஆணவம்...அனுபவம்...

அனுபவம் என்பது தவறுகளைத் திருத்திக் கொள்வது.

ஆணவம் என்பது தவறுகளை நியாயப்படுத்துவது..

ஆணவம் வாழவிடாது!...
அனுபவம் வீழ விடாது!...

# நானும் எனது தமிழ் பாடசாலையும்...

## எசன் தமிழ்ப் பாடசாலை..

எமது தமிழ்ப் பாடசாலை எசன் தமிழ்ப் மொழிச் சேவை கலாச்சார மன்றத்தின் கீழ் எசன் தமிழ்ப் பாடசாலையாக இயங்குகிறது.இது எசனின் நகரப்பகுதியில் அமைந்துள்ளது. 1988 ஆம் ஆண்டு தமிழ்ப் பாடசாலையை திரு திருமதி வேலாயுதம் தம்பதிகள் ஆரம்பித்தார்கள். தற்பொழுது பெற்றோர்கள், பழைய மாணவர்களின் பெற்றோர்கள் இப்பாடசாலையை திறம்பட நிருவகித்து வருகிறார்கள்.

2012 ஆம் ஆண்டில் இருந்து இப்பொழுது வரையும் நான் தமிழ்ப் பாடசாலையில் படிக்கின்றேன். தற்போது நான் ஒன்பதாம் ஆண்டில் படிக்கின்றேன். இந்த ஆண்டுகள் கடக்கும் பொழுது நிறைய விடயங்களை கற்றுக் கொள்கிறேன்.

எங்கள் பாடசாலையில் பேச்சுப்போட்டி, தமிழ் திறன் போட்டி, சித்திரப் போட்டி என்று வருடத்தில் இரண்டு போட்டிகள் நடைபெறுகின்றன. சிலமுறை விளையாட்டுப் போட்டியும் நடைபெறும். இப் போட்டிகளில் நான் பல பரிசில்களை பெற்றேன். இது மட்டுமன்றி பொங்கல் விழா, நவராத்திரி விழா, ஆண்டு விழா மற்றும் நத்தார் விழா போன்ற விழாக்கள் தமிழ்ப் பாடசாலையில் நடைபெறும். நாங்கள் எல்லோரும் மகிழ்வுடன் கொண்டாடுவோம்.

தமிழ்ப் பாடசாலையின் மூலம் பல நிகழ்வுகளை வெவ்வேறு இடங்களுக்குச் சென்று நிகழ்த்தினோம். தமிழ்ப் பாடசாலையில் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருப்போம். மாணவர்களை ஊக்கப்படுத்தும் அரையாண்டுப்பரீட்சை, இறுதியாண்டுப்பரீட்சை என வருடத்தில் இரு பரீட்சைகள் நடைபெறுகின்றன.

தமிழ்ப் பாடசாலையில் தமிழ் மொழியை நன்றாக வாசிக்க, படிக்க,கதைக்க கற்றேன். சிறு வயதிலிருந்து என் வகுப்பில் இருந்த மாணவர்களுடன் நான் நல்ல நண்பர்களாக இருக்கின்றேன்.

எம் மொழியை தமிழ்ப் பாடசாலையில் கற்பது பெருமைக்குரியது.நீண்ட காலம் தமிழ் மொழியை மறக்காமல் இருக்க தமிழ்ப் பாடசாலை உதவி செய்கின்றது.

எம் தாய் மொழி தமிழை நன்றாக கற்போம்.

**செல்வி அனுஸ்கா ராகவன்**
**ஆண்டு .9**
**எசன் தமிழ் பாடசாலை**

# குறளும் பொருளும்...

## நாடு...

731 - தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேவது நாடு.

732- பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

733 - பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

734 - உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.

735 - பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.

736 - கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை.

737 - இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வுல்லரணு நாட்டிற் குறும்பு.

738 - பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

739 - நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாடா வளத்தரு நாடு.

740 - ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

# குறளும் பொருளும்...

## நாட்டின் பெருமை...

731- குறைவு இல்லாத விளைபொருளும் தகுதி வாய்ந்த அறிஞரும், குறையற்ற செல்வம் உடையவர்களும் கூடி வாழ்வதே நாடாகும்.

732- செல்வ வளமுடையதாய் எல்லோரும் விரும்பத்தக்கதாய் கேடற்றதாய், விளைபொருளை மிகுதியாகத் தருவதாய் உள்ளதே நாடாகும்.

733- பிற நாட்டு மக்கள் குடியேறுவதால் உண்டாகும் சுமையைத் தாங்கித் தன் அரசனுக்குரிய இறைப்பொருள் முழுவதையும் தரவல்லது நாடு.

734- மிகுந்த பசியும் தீராத நோயும் தொலையாத பகையும் தன்னிடம் சேராது இனிதாய் நடப்பதே நாடாகும்.

735- மாறுபட்ட பல கூட்டமும், உடனிருந்து தீங்கு தரும் பகையும் அரசனை வருத்துகின்ற கொலைத்

தொழிலையுடைய குறுநில மன்னரும் இல்லாததே நாடாகும்.

736- பகைவர்களால் கெடுக்க முடியாததும் தவறிக்கெட்டாலும் தன்வளம் குறையாததுமாய் இருக்கும் நாடே தலை சிறந்தது.

737- ஊற்று நீரும், மழை நீரும் தகுந்த மலையும், அம்மலையிலிருந்து வரும் நீரும் வலிமையான அரணுமே நாட்டிற்கு உறுப்புகள் ஆகும்.

738- நோய் இல்லாமையும் செல்வமும் நல்ல விளைவும் இன்ப வாழ்வும் பாதுகாவலுமாகிய ஐந்துமே ஒரு நாட்டிற்கு அழகாகும்.

739- வருந்தித் தேடாமலே வளம் தருவது சிறந்த நாடாகும். என்பர் நூலோர். வருந்தித்தேடி வளம் தருவது சிறந்த நாடல்ல.

740- நல்ல அரசனைப் பெறாத நாடு எல்லா வளங்களையும் பெற்றிருந்தாலும் அவற்றால் பயன் இல்லாமல் போய்விடும்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## உரிமை...

மழை...தவளைகள் மகிழ்ச்சியோடு உரக்கக் குரல் எழுப்பின. குளத்தில் இருந்த ஆமை தவளைகளைப் பார்த்துச் சொன்னது...இப்படிக் கத்துகிறீர்களே...உங்கள் குரலைக்கேட்டுப் பாம்பு உங்களைப் பிடித்துவிட்டால் உங்கள் நிலை என்ன ஆவது?.. தவளைகள் சிரித்தன.. " நாங்கள் கொஞ்சமும் கவலைப்படமாட்டோம் "என்றது கூட்டத்தில் ஒரு தவளை. இன்னொரு தவளை சொன்னது...

**" மூச்சை இழக்கலாம்...பேச்சை இழக்கலாமா "**

## வீறு...

யானையைப் போர்க்களத்துக்கு அழைத்துப்போகிறார்கள். களியாட்டங்களில் பழக்கி, வீர விளையாட்டுக் காட்டுகிறார்கள். ஊர்வலங்களில் கோவில்களில் கொண்டுவருகிறார்கள். யானை இல்லா விழாக்களே இல்லை!.. என்ற ஒரு குருவி மற்றக்குருவியைப் பார்த்துச் சொன்னது. இரண்டாம் குருவி வியப்போடு கேட்டது. "யானைக்கு எப்படி இத்தனை ஆற்றல்கள்?.." முதல் குருவி சொன்னது....

**" வீறுடையான் நூறுடையான் "**

# குறுக்கெழுத்துப்போட்டி-203
## (தை - மாசி 2025)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-06 தமிழர் திருநாள்.
05-07 தமிழர்களுக்கு உயிர் மூச்சா விளங்குவது.
12-14 தமிழர் பெரு நிலப்பகுதியை இப்படியும் அழைப்பார்கள்.
15-20 சிலர் இப்படியாக வாழ்ந்து பணத்தை விரயமாக்குவார்கள்.
29-32 வடபகுதியின் வரண்ட பிரதேசம்.

வ-இ
12-09 உருவங்களில் ஒன்று.
27-23 இனிப்பான உணவுப் பொருள்.
39-37 சிலர் இது எழுதுவதில் வல்லவர்கள்.
46-43 சிலர் இந்தக் குணத்தால் வாழ்வை அழித்துவிடுவார்கள்.

கீ.மே
15-01 பறவை ஒன்று.
28-14 பெண்களின் ஒரு பருவம்.
48-20 அமரத்துவம் ஒத்தசொல் இது.

மே-கீ
15-43 நம் நாட்டில் நிழல்தரும் மரம்.
28-49 இலக்கியத்தில் மாபெரும் கொடை வள்ளல்.
33-47 இது ஒரு பூச்சி இனம்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# புதிய உலகம் புதுமை...

புத்தாண்டு பிறந்தது புதிய விடியலாய்,
கண்களில் ஒளியேற்றி, கனவுகளில் நம்பிக்கையாய்.
தோல்வியைக் கடந்து வெற்றியின் பாதையில்
முடிவற்ற முயற்சியில் மலரும் வாழ்க்கை...

நதி போல நேரம்
நிற்காமல் ஓடுகிறது
வெற்றி கைகளில் சிக்கும் வரை
நீயும் நிற்காமல் ஓடு..
உன் புன்னகையால்
உழைப்பின் வழியில் நீ நகர
உலகம் இனிதாய் ஒற்றுமையில் மலரட்டும் ...

பழைய கலவரம்
புதிய கோபம் கனிவுடன் நிறுத்து!
இனி வஞ்சகம் தாண்டி நீ
உயர வேண்டும்.!
அறிவும் அன்பும் துணை சேர்த்து,
தலைமுறைக்குச் சொந்தமாய்
மாற்றத்தை ஊக்குவிப்பாய்..

அன்பின் மொழி வளர்த்திட
சமாதானம் எங்கும் நிறைந்திட
நட்சத்திரங்களை நோக்கி
பயணமாகி
விண்வெளி வரை வாழ்வின்
கனவை எட்டிட
புதிய உலகம் புதுமை மனிதனுக்கு..

வாழ்க்கை ஒவ்வொருவருக்கும்
ஒரு விளக்கு
அதை நீ அறிவால் ஏற்றிடு.
புத்தாண்டு ஒவ்வொரு நாளும்
புதிதாய்உன் சுவாசத்தில் மலர
வெற்றியின் வாசம் பரவட்டும் !

**சத்யா பிரான்சிஸ் - மலேசியா**

# புத்தாண்டே வருக!..

ஆங்கிலப் புத்தாண்டே வருக
புதியன கொண்டு வந்து தருக
பூமியில் நல்லதை விதைத்து விடு
இயற்கை அழிவு
இனிமேல் இல்லையென சொல்லி விடு
விவசாயிகள் நிலத்தை கவனமாக
காத்து விடு
உலக மக்கள் பட்டினி சாவை
அகற்றி விடு
உலகப் போர் குண்டு
தாக்கங்களை நிறுத்தி விடு
துப்பாக்கி சூட்டுச் சாவுகளை
துப்பி விடு
தீமைகளை தீயில் கொழுத்தி
எரித்து விடு
அரசியல் தலைவர்களின்
அநிநாய செயல்களை ஒளித்து விடு
அரசியல்வாதி யகள்
மக்களுக்க நல்ல பணி
செய்ய புத்தியை கொடுத்து விடு
நாடுகளில் ஒற்றுமை சமாதானம்
கிடைக்க நல்வழி திறந்து விடு
நிஜத்தில் நிம்மதியாய் வாழ
உறைந்து விடு
தீமைகளை தீயில் கொழுத்தி
எரித்து விடு
எல்லோர்க்கும் நல்லதையே தந்து விடு
புத்தாண்டே புதியன தந்து
நிறை வாழ்வு சொல்லி விடு

**ஜெயா நடேசன்**
**ஜேர்மனி**

## வெட்டப்பட்ட மரங்கள் பேசினால்'...

**- எடப்பாடி ஆ.அழகேசன் -**

நன்றி கெட்ட நாயே மானிடா
மரங்களின் மகத்துவம் மறந்த மடையா
சாதியெனும் சாக்கடைக்குள்
சாய்ந்திருக்கும் சண்டாளா
அறியாதவன் போல் நடமாடும் பிணமே

சுற்றுச் சூழல் உலகு காத்த
என்னைப் புதைக்குழிக்குள்
தள்ளிப் புதைத்தாய்
பிணந் தின்னும் கழுகே ரத்தக்
காட்டேரியே மானங்கெட்டவனே மனிதா
நீவாழும் வாழ்வு ஓர் வாழ்வா?

இலை தழை கிளைகள் சாய்த்து
வேரோடு சாய்த்த
விவேகமற்ற கல்நெஞ்சா
கொல்ல வேண்டும் சுற்றுச் சூழல்
எதிரியான உன்னை சவக் குழியில்
தள்ள வேண்டும் உதவுதலன்றி
வேறெதுவும் நான் அறிந்ததில்லை

என்னுள் ஈக்குண்டு தேக்குண்டு
ஈட்டியுண்டு சந்தனம்
செம்மரமென பலவகை மரமுண்டு
என்னிடம் பகைகொண்டு திரியும்
மனிதா உன்னுள் பகையன்றி
துரோகம் தீங்கிழைக்கும்
குணமுண்டு வேறென்னவுண்டு

உன்னையும் என்னையும்
சமமெனப் படைத்தானே!
உன்னைக் காத்த என்னை
உன் ஆளுகையில் விட்டானே!
எவ்வுயிரும் தீங்கிழைப்பதில்லை
எனக்கு தீங்கைத் தவிர
வேறெதுவும் செய்ததில்லை
நீ எனக்கு

கோடாரி கொண்டுனை வீழ்த்துவேன்
கிளைக் கைகள் கொண்டுன்
கழுத்தை நெருக்குவேன்
இவையெல்லாம் சாத்தியமா
எனக்குத் தெரியாது!
மனிதர்களில்லா புது யுகத்தில்
பிறந்திட வேண்டுகிறேன்
படைத்தவனே உனை யாசிக்கிறேன்
மனிதரிடம் வர யோசிக்கிறேன்!

## பெஞ்சால் புயல்!...

பெஞ்சால் புயல் புதுப்
பெயரில்
போட்டுப் போட்டு வாங்குது
மழையோ பெஞ்சு பெஞ்சு
கொட்டிக் கொட்டி வயல்,
வரம்பு முட்டித் தேங்குது

ஆறு குளம் உடைத்து வெட்டி
வெட்டிப் பாய்ந்து ஓடுது
பாம்பும்,முதலையும்
குடைந்து குடைந்து
கடித்துக் குதறுது

ஆடும்,மாடும் தவித்து
ஆட்களுடன் சேர்ந்து
மிதந்து அலறுது

காலங்காலமாய் அடர்ந்து
படர்ந்த பல்லாண்டு வளர்ந்த
மரமோ அடி வேரோடு
கிளம்பிச் சாயுது

அங்குமிங்கும் தேடி ஓடி
மாந்தர் வீட்டை விட்டு
வெளியேற வழியின்றித்
தவித்திட

கும்மாளமடிக்கும் இளசுகளோ
நாட்டு நடப்பைக் கூட்டிப்
பெருக்கி வலை ஒளியில்
இல்லாத பொல்லாத அல்லாத
கதை சொல்லி ஓடி ஓடி
நீச்சல் அடிக்கினமே....

**ராணி சம்பந்தர் -**
**ஜேர்மனி**

# பேய் மழை....

-வே புவிராஜ் - நோர்வே -

வானத்தில் இருந்துஒருசுனாமி
வளங்களை அழித்தொழித்து
வெள்ளக்காடாய் மாற்றுகிறது...

இயற்கை தன் கோபத்தை
கொட்டித் தீர்க்கிறது.
முற்பகல் விதைப்பின்
பிற்பகல் விளையும்
எனும் அடையாளமாய்...

ஊழ்வின் அனைத்துக்கும்
அதன் செயல்வினை உண்டு
.இயற்கையோடு மனிதன்
அண்டி இராமல்
ஒட்டிக் கொள்ளாமல்.
விட்டுப் பிரிந்ததினால்
கொட்டித் தீர்க்கிறது மழை...

மலைகள் குடைந்து
மரங்கள் களைந்து கனியம்
உமிழ்ந்து அணுவை பிளந்து
இயற்கை அழகை
மனிதன் கெடுத்தான்...

தன் ஆசை அடங்கா
பாவம் இளைத்தான்
பாவம் பழிக்குத்
தீர்ப்பை அளித்தான்
இயற்கை என்ற இறைவன்...

காக்கை கூட்டில்
குயில்கள் வாழும்
கறையான் புற்றில்

பாம்பு பூரும்
இயற்கை விதித்த
நியதி அதிலும்
காகம் கரைந்து
கறையான் மேய்ந்தால்
குயிலும் பாம்பும்
குடிலை இழக்கும்...

ஒன்றைச் சார்ந்து ஒன்று வாழும்
ஒன்றில் ஒன்று கலப்பதில்லை .
மனிதன் கலந்து கலந்து
கலவையாக்கிஅழிவின்
விளிம்பில் நிற்கின்றான்.
வானை அண்ணார்ந்து
பார்க்கின்றான்...

வேம்பின் வேரில்
வேங்கை விருட்சம். தும்பைச்
செடியில் துளசிப் பூக்கள்.
நெல்லுக்கூட மரத்தில் காய்க்க
கிழங்கு கூட மரக்கிளையின்
இடுக்கில் மர நரம்பு வெடித்து
அதில் பூவும் காயும்.
இயற்கை அழகின் இயல்பை மாற்றி
மாற்றம் செய்த மனிதன் இன்று...

கள்ளிப்பாலில் வெண்ணை
பிரிக்க மண்ணை திரித்து
கயிறு முடிக்க
வானம் பிழிந்து வண்ணம்

எடுக்க கற்றைக் கூட காசாய்
மாற்ற போட்ட கணக்கில்
பூகம்பம் முளைத்தது...

எண்ணம் போலே
எல்லாம் மாற்றி
இயற்க்கைக்கு எதிராய்
எழும்ப முனைந்தான்...

மாற்றம் ஒன்றே மாறாதொன்று
மாற்றி மாற்றி
மருந்து செய்தான்
மனுசர் மந்தை
செடிகள் கூட புணர்ந்து
தரிக்கும் கருக்கள்
இல்லை. மருந்துக்கடையில்
வேண்டி விதைக்கும்
விதிகளாக ஆனது
ஆண் பெண் கருக்கள்...

அறிவின் ஆற்றல் அறிவியல் ஆனது
அறிவியல் வளர்ந்ததும்
மனிதம் உடைந்தது
மனிதம் கடவுள்
இரண்டும் பிரிந்தது
பிரிந்ததாலே இயற்கை
சினந்தது..

மனிதா முடிந்தால்
மனதை மாற்று
மாற்றம் வேண்டில்
உன்னை திருத்து
நீ மாறாய் நின்றால் இயற்கை
உன்னைக் கொன்று குவிக்கும்!...

## தமிழ் ஆராய்ச்சி மகாநாடு..

**ஞானம்** - Holland

உலகில் முதல்மொழிகளில் தமிழ்
உலகில் பல தமிழர்கள்
மிளிர்கின்றனர்
தமிழ்மொழிக்கு மகாநாடு
வேண்டுமென்று
தமிழ் செயற்பாட்டை பலர்
உயர்த்தினர்
தமிழராட்சி மகாநாட்டை
செயற்படுத்ததமிழ் புலவர்
தனிநாயகம் அடிகளார்
பல நாடுகளில் தமிழில் மிளிர்ந்து
பல விடயங்களை
செயற்படுத்தியவர்
யாழ்ப்பாணத்தில் சிறப்பான
விடயம்
யாழில் மிளிர்ந்நு வருவதை
மனம் தாங்காத இதைணுவம்
மனம் கொண்ட தமிழர்களை
மனிதவிடயமின்றி கொலை
செய்தார்கள்
தமிழ் மொழியை மேலும்
மேம்படுத்த
தமிழர்கள் மகிழ்வான மகாநாட்டை
தமிழ்மொழி சிறப்பாக
ஓயர்ந்திடுமே
தமிழ்மக்கள் சிறப்பாக
வாழ்ந்திடுவார்கள்
உள்வாங்கி தமிழரை கொலை
செய்தார்கள்
உள்ளமற்ற இலங்கை
இராணுவத்தினர்
தமிழர்களில் ஒன்பதுபேரை
கொலை செய்தார்கள்
தமிழர்கள் பலரை கொடுமை
செய்தார்கள்
இவ்வாறு தமிழ் அழிவு தொடர்ந்து
செல்கிறது
அரசின் செயற்பாட்டின் திறன்
தமிழராட்சி மகாநாட்டில் இறந்த
தமிழர்களின் நிலைகளை அறிந்து
தமிழர்கள் தொடரமுடுயாமல்
இருக்கின்றனர்இதற்கு
முன்பின்எத்தனைதமிழர்கள்
இறந்து போனார்கள் அரசால்
உண்மைகள் தமிழருக்கு
கிடைப்பதில்லை
உள்வாங்கிக் கொள்வோம்
தாய்நாட்டோடு!......

# தைத்திங்கள்

தலைமைத்துவ பரிதியை வணங்குகின்ற பொங்கல்
ஒளிமுதலாய் ஓங்கார நாயகனே நன்றி
உலகமது வாழ்வதற்கு உரமான ஆதவனே நன்றி
மெய்ப்பொருளும் மேன்மைகளும் நிறைகின்ற சக்தி
வயல்நிலமும் பயிர்கொடியும்
பசுமைக்குள் நிரம்பி
பார் வாழ உணவு தரும் உழவர் நிலை போற்றி
உறுதுணையாய் காளைகளும் உழுதுநிலம் விதைக்கும்
நயமான பணிக்கு ஈடேது நாம் செப்பும் நன்றி
தைத்திங்கள் முதல்நாளில் முற்றமது மெழுகி
மூவர்ண கோலமிட்டு மூன்றடுப்பு மூட்டி
புதுப்பானை தன்னிலே புத்தரிசி இட்டு
பொங்கலிட்டு படையலிடும் பண்பாட்டு கோலம்
உறவுகளும் ஊரவரும் வாழ்த்தொலிக்கும் நேரம்
பட்டாசு வெடிச்சத்தம் பாலர் கூட்டுறவு சேரும்
விழாக்கால விருந்தோம்பல் விதவிதமாய் நிகழும்
ஆவினத்துப் பொங்கலும் தான் அடுத்த நாளில் ஆகும்
ஏர் எடுத்த கைகளுக்கு ஏற்ற நன்றி பகிரும்
ஒளி தரும் கதிரோனே செப்புகிறோம் நன்றி
ஊக்கமுற உரமீர்ந்த எருதுகளே நன்றி
வாழ்க்கையது வளம்பெறவே
வரமான சக்தி
தைத்திங்கள் முதல் நாளாய் தனித்துவத்தைத் தாங்கி
நன்றி கூறும் மரபுத்திங்கள் மலர்கிறதே தமிழர்திருநாளாய்
தரணியிலே பொங்கி!

**நன்றி வணக்கம்**
**வசந்தா ஜெகதீசன்**

.......................................................................

**கூட்டம்....**

மதுவும் மாதுவும் விழாவில்
மாமிசமும் ஒன்று சேர்ந்து
மத மாற்றம் செய்து
மூளைச் சலவை செய்திடவே
அலைகின்றது ஒரு கூட்டம்

**துடிப்பு...**

கொட்டும் மழையால்
குழந்தையை அணைக்கும் தாய்
போதையின் உச்சத்தால்
மனைவியை அணைக்கத்
துடிக்கும் கணவனின் கை...

**- சிவா -**

## போற்றி வணங்கிடுவோம்!...

கன்னலின்பொழிவாய்க் களிப்பின்மிளிர்வாய்
கனிவைத் தரவே வருவாய் புத்தாண்டே
பொன்னும். பொருளும் பொலிந்து நிற்கப்
பொறுப்பை உணர்ந்து உயிர்கள்தொடர
அன்பின் வழியில் அகிலம் தொடர்ந்து
ஆலாய் அறுகாய் உறவுகள் படர்ந்து
வன்மம் இல்லா வாழ்வு நிலைக்க
வளமாய் நீயும் வருக புத்தாண்டே!

எண்ணம் தன்னில் இரும்பைக்கொண்டு
ஏற்றங் கண்டே இலக்குகள் வென்று
மண்ணில் பசுமை மலர்வைக் கூட்டி
மக்கள் வாழ்வில் நிம்மதி நிலைக்க
வண்ணம் சிந்தி வனப்புகள் ஒளிர
வாஞ்சை ஆண்டாய் வருவாய் புத்தாண்டே!

காடு கழனி செழித்து விழையக்
காயும் கனியும் நிறைந்து பொலிய
வாட்டம் காணா வற்றா ஊற்றாய்
வசந்தம் ஒன்றே. வாழ்வாய்க் கண்டு
நாடும் வீடும் நவங்களைச் சூட
நலங்களைத் தாங்கி வந்திடு புத்தாண்டே!

**- கீத்தா பரமானந்தன் -**

.............................................

## ஏக்கம்!...

மழைவெள்ளம் நன்றாகக்
கொட்டினால் பெரும் மகிழ்ச்சி
ஏன் என்றான் அவன் நண்பன்
பொருட்களை இரட்டிப்பாக
விற்கலாம் என்றான் ஏக்கத்துடன்
திண்டு கொழுத்த முதலாளி....

**- சிவா -**

## தை பிறந்தால்!...

தை பிறந்தால் வழிபிறக்கும்
ஆன்றோர் வாக்கு
தைபிறந்தால் மனம் மகிழும்
சான்றோர் போக்கு
விதைத்த வயல் அருவி வெட்டி
வீடு வரும் நெல்லு மூட்டை
குத்தி அந்த புத்தரிசியை
பொங்கலிட புதுத் தெம்பு
பட்டகஷ்டம் பட்டெனவே
போகும்
வீடுவந்த நெல்லு மூட்டை
கண்ட கணப்பொழுதில்
மகளுக்கு திருமணம்
நிச்சயித்த மாப்பிளையுடன்
மனவுவந்த சீதனம்
கொடுப்பதற்கு
தடையில்லை
ஈடுவைத்த காணி மீட்டு
கடன் கொடுத்த நிம்மதி
மாடு இரண்டு புதிதாய் வாங்க
மனத்திலே ஆசை
உழவன் வாழ்வில் உச்சக்கட்ட
நினைவுகள்
பழகிப் போன சில கசப்பான
நிகழ்வுகள்
என்றாலும் இந்த முறை
இறைவன் கொடுத்த வரமதிலே
வயல்விளைந்து வெற்றிதனை
தந்ததே
மனதில் இறைவனைக்கு நன்றி
சொல்லி
படையலிட்டான் சூரியனுக்கும்
நன்றி செலுத்தி
உழவன் வாழ்வில் உயர்ச்சி
வந்தால்தான்
உலகமக்கள் பசி இன்றி
வாழமுடியும்
உழவனைப் போற்றுவோம்
தை பிறந்தால்
ஒளிகிடைக்குமென!

**- கெங்கா ஸ்ரான்லி -**

# தரணியெங்கும் பேரிகை.

- இரா . சம்பந்தன் -

தைத்திங்கள் பிறந்துவர
தைப்பொங்கல் சேர்ந்துவர
இல்லங்கள் பொலிவுற
உள்ளங்கள் உவகையுறும் .

தமிழர்தம் பண்டிகையில்
தரணியெங்கும் பேரிகை !
உழவர்தம் திருநாளில்
உதடுகளில் புன்னகை !

உதயத்தை வழங்கிய
உதய சூரியனை வணங்கி ,
உழைப்பினை நல்கிய
உழவர்களை மதித்து ,
உலகத் தமிழினம்
உதயத்தில் பொங்கலிடும் .

அதிகாலையில் நீராடி
அழகுறப் புத்தாடை புனைந்து
ஆலயம் செல்பவரை
அவனியெங்கும் கண்டிடலாம் . .
. .

வாசலை அலங்கரித்து
வண்ணமுறக் கோலமிட்டு
பொங்கல் பானைவைத்துப்
பொங்குவதைப் பார்த்திருப்பர் .
பொங்கிவரும் பொங்கலது
எழுகதிர்த் திசையெனில்
எழுச்சி கொண்டே மகிழ்வர் !

தங்கநிற நெல்மணிகளால்
தரணி பசியாறும் !
பங்கமிலா வாழ்வொன்றைப்
பாருக்களித்திடும் உழவர்களைப்
போற்றும் திருநாள் !

பண்டிகைக் காலங்கள்
அவசர உலகில்
அவதியுறும் மாந்தர்க்கு
அகமகிழ்வைத் தந்து
புத்துயிர்ப்பை யளிக்கின்றது

எந்நாளும் பண்டிகை !
ஆடை யாபரணங்கள்
மாளிகை வாசிகளுக்கு !
மண்குடிசை வாசிகள்
இந்நாளில் கூட
கந்தைத் துணிகளையே
கசக்கி யுடுத்திடுவர் !

வெஞ்சமர் விளைந்த பூமியிலே
பஞ்சம் தலைவிரித்தாட ,
வாழ்வாதார மிழந்தவர்கள்
வாடும்நிலை மாறிவர ,
வழியொன்று பிறக்கட்டும்
வருகின்ற திருநாளில் . . . .

இழப்புகளினால் வாடுபவர்கள்
இளைத்தவர்களாய்ப் போனவர்கள்
தழைத்திட மார்க்கமொன்று
தைத்திங்களில் தோன்றட்டும் .!

வாடிய முகங்கள்
வண்ண மலராய்ப் பூத்திட
நாட்டினில் நல்லாட்சி தொடரட்டும் ..!

நலிந்தவர் குடிசைகளிலும்
மெலிந்தவர் வாசல்களிலும்
பொலிவுறும் பொங்கலது
பொங்கியே சரியட்டும்!.. .

# தண்ணீர்!..தண்ணீர்!..

- சந்திரா - டென்மார்க் -

நீரின்றி அமையாது உலகு
நீரின்றி உயிர்வாழ முடியாது
இயர்கையின் கொடையாக
இறைவன் தந்த வரமாக
சிந்தும் வெண்பனிச் சாரல் நீர்

கொட்டும் அருவியாய்
கொள்ளை அழகுமாய்
வெள்ளை வயிரமாய்
துள்ளிப் பாயும் குமரியாய்
ஆற்பரித்து ஓடும் அருவி நீர்

பச்சை வண்ண வனத்து
பசுமை தரும் நிலத்து
படர்ந்த இளம் தளிர்
பார்த்த கண் குளிர
பயிர் செழிக்கும் மழை நீர்

உழவர் மகிழ்ந்திட
உழவுக்கு நீர் தந்து
உழைத்தவர் உயர்ந்திட
பசித்தவர் புசித்திட
தாகம் தீர்க்கும் தண்ணீர்

அசைந்தாடும் அலைகள்
தாவரங்கள் தாலாட்டி
உயிர்களை தன்னகத்தே
உள்ளடக்கி காப்பாற்றி
உலகுக்கு உணவளிக்கும்
பொறுமையின் சிகரம் கடல் நீர்

வேதியியல் மாற்றமே
இயர்க்கையின் சீற்றமே
ஆழ்கடலின் அழகொழிய
பவழப்பாறை இனமொழிய
கடல் மீன்கள் கரை ஒதுங்க
சுனாமியாய் எழும்பும் அலை நீர்

வீசும் காற்று மாசாக
நிலத்தடி நீர் கனலாக
மண்புழுவும் மாண்டுபோக
மண்ணும்கூட மலடாப்போக
விதைத்த விதை கருகியதே
விதைத்தவனோ கண்ணீரில்

காலத்தின் கோலமிதே
காண்பதெல்லாம் கானல்நீரே
குடிநீரும் விலையானதே
தென்றலும் புயலானதே
முன்மாரியும் பொய்யானதே
கார்காலம் மாறிப்போனதே
கனத்த மழை அழிவானதே
மூழ்கிறோம் நாம் வெள்ளநீரில்....

................................................................

## கூட்டம்...

வாழும்போது ஆட்டம்
அதிகமாக இருந்தால்
சாகும்போது கூட்டம்
குறைவாகத்தான் இருக்கும்!...

## வாழையிலை...

மருத்துவ குணமுடையது
துப்பரவாகவும் சுவையாகவும்
உணவழிக்கும் வாழையிலை
இறுதியில் குப்பைத்
தொட்டிக்குத்தான் சொந்தம்...

- சிவா -

# மண் இதழிலக்கம் 228 இற்கான அட்டைப்படக்கவிதை.




ஜாலமாய் வெடிமருந்தைக்கண்டு யௌவனத்தில திரவுகாட்டி
யாவருமறிந்த அறிவியலாளர் அல்பிரட் நோபலின் நாமம்சூட்டி
கோலத்தில் புள்ளிகளாய்ப்பூ கோள அறிஞரை வெளிக்காட்டிக்
குவலயத்தில் பெருமதிப்பைக் கூட்டுகின்றதே  நோபல் பரிசு.

காலத்தின் அவசியமாய்க் கற்றவர்க்கும் கணிப்பவர்களுக்கும்
கலங்கரை விளக்குகளாய் இந்த காசினியைக் காப்பவர்க்கும்
சீலத்தில் சிறந்தவராய் நற் சிந்தனைத் திறனுடையவர்க்கும்
சிறப்பினைப் பாராட்டிச் சேர்ந்துலகு வாழங்கும் நோபல் பரிசு

தூலத்தில் துலங்கிடாத தூரத்தினைத் துல்லியமாய் ஆய்ந்த
தொழில்நுட்பத் திறனுக்கும் தொல்லியல் நிபுணராய் வாய்த்த
ஆலத்தை அமுக்கியதை அருமருந்தின் ஆக்கத்திற் மிகத்தேர்ந்த
ஆளுமையைக் கண்டறிந்து அறிவிக்குமே யிந்த நோபல் பரிசு

நீலத்தைச் சூழ்ந்தவானும் நீள்வளத்தின் பெருக்கத்தைக்காணும்
நித்திலத்தில் சமாதானத்தோடு சம நிலைநிறுவும் பொருளியலும்
ஏலத்தில் உயர்ந்த இலக்கியத்துக்கும் இயற்பியல் வேதியலுக்கும்
ஏற்றமுடனே கௌரவித்து எழுச்சினைக் கூட்டுமே நோபல் பரிசு.

**- அம்பலவன்புவனேந்திரன்..**

# நின்னைச் சிலவரங்கள் கேட்பேன்!...

எட்டுத்திசை எட்டும்வகை சுட்டும் குணக வானம்
பொட்டெனவே வட்டக்கதிர் திட்டாய் ஒளிக்கோலம்
சிட்டுக்களின் பட்டுக்குரல் சொட்டும் இசைஜாலம்
கொட்டும்பனி முட்டும்குளிர் எட்டும்ஒளிக் ககனம்
மொட்டுகளைக் கட்டவிழ்த்துத் தட்டிவிடும்கள்ளும்
எட்டுவைத்த கட்டழகுப் புட்பமதாய்த்தை ஜனனம்..

விட்டக்கலாத் தொட்டுவரும் சுட்டுவிழியே வருக.!
தொட்டணைத்து விட்டகன்ற ஒட்டுறவைத் தருக..!
பட்டதுயரை வட்டியுடன் பொட்டலமாய்க் களைக..!
பட்டினியால் முட்டும் இடர் சட்டெனவே மறைக..!
பட்டறிவால் சுட்டும்மனிதம் பட்டெனவே மலர்க..!
இட்டமுடன் கட்டணமாய் மட்டிலாவ மைதியருள்க..!

பட்டுப்பாதம் பட்டதாலே கெட்டவைகள் அகல்க..!
வெட்டவெளிப் பட்டமரம் தொட்டவுடன் துளிர்க்க..!
திட்டுக்களில் நட்டபயிர் கொட்டும்பயன் குவிக்க..!
வட்டங்களில் ஒட்டிநிற்கும் சுட்டிகளும் உயர்க..!
விட்டெனத் தொட்டதெலாம் பெட்டகமாய்த் திறக்க.!
பட்டங்களும் திட்டங்களும் நட்டங்களைக் களைக!

கட்டிப்போட்ட கெட்டவைகள் பட்டுப்போய் உதிர்க..!
முட்டும்வலித் தட்டுக்களை விட்டகற்றி விடுக..!
எட்டிநின்ற சட்டம் நீதியும் நுட்பமாகவே எழுக..!
விட்டமதைத் தொட்டுநிற்கும் சுட்டவடு விலகுக..!
மட்டரகமாக துட்டர்களின் கொட்டமது அகல்க..!
பட்டவிடர் விட்டகன்று மட்டற்ற மகிழ்வைத் தருக.!

**- அம்பலவன்புவனேந்திரன் -**

........................................................................................

**பணம்!.....**

பணம் மனிதனைப் பார்க்காது
மனிதன் பணத்தைப் பார்க்கிறான்
பணம்..பணம்..என்று அலைவோர்
இறப்பில் ஒரு ரூபாகூட சொந்தமில்லை!..

**சாம்பல்!.....**

அடுப்பில் விறகு எரித்து
சோறுபொங்கித்தந்த அம்மாவை
இறுதியில் விறகு எரித்து
தீமூட்டிச் சாம்பலாக்குகின்றோம்!..

**- சிவா -**

# போதை உலகம்!...

- ப.பசுபதிராசா -

நல்லவராய் நடமாடும் அயோக்கியர் மனம் பித்து
காசுக்காய் எதையும் விற்கும் காட்டுமிராண்டித்தனம் சமூகவிபத்து
இன்றைய இளையனை குறி வைத்துக் குதறும் போதை வஸ்த்து
உலகெங்கும் வேரூண்றி வினையாகும் விபரீத அபாய ஆபத்து...

திரைப்படங்கள் மூலம் போதை பற்றி விளம்பரப் புத்தி அறிவிப்பு
படம் தயாரித்தவன் வருமானம் போதைவிற்று வந்ததாய்த் தெரிவிப்பு
கேடுகளை அழித்து ஒழித்து விட்டதாய் தினம் அரசு கொக்கரிப்பு
அரசே குற்றவாளிகளை ஒளித்துவைத்து நாடகமாடும் உருமறைப்பு...

பஞ்சுமிட்டாய்களுக்குள் நஞ்சு இருப்பதாய் அதற்குத் தடைபோட்டு
நெஞ்சு பொறுக்குதில்லையாம் குழந்தைகள் அதை உண்பதைக் கண்டு
பிஞ்சுகளின் உணவுக்குள் போதைப் பொருள் இருப்பதைக் கேட்டு
அஞ்சி அஞ்சி நடுங்குகின்றது அயல் உலக ஆராய்ச்சித்திரட்டுத்திட்டு...

மக்களைப் பற்றி நல்ல தொலை நோக்கு எதுவும் இன்றி
காசை மட்டும் கரிசனைகொண்டு அரசு நடத்தும் பண்பு முற்றி
போனதால் கள்ளர்களும் காவலாளிகளும் கூட்டுக் கூடாரமாகி
கலங்கிக் கிடக்கின்றது நம்மை ஆளும் அதிகாரங்கள் வெட்கி...

உலக மாந்தர்களைச் சீரழிக்கும் இன்றைய போதைக் கும்பல்
சின்னச் சின்ன சிறுமிகளை வதைத்து எரியூட்டிச் சாம்பல்
அரசின் பங்காளி ஆகிவிட்டால் அனைத்துமே நலம்தரும் பம்மல்
நமக்குப் பாதிப்பு இல்லை என்றுமட்டும் பாராமுகம் சோம்பல்..

பள்ளிகள் எல்லாம் போதை வஸ்த்து வாசலில் வந்து சரணம்
சினிமாப்பேர்களுக்கு விதம்விதமாய் போதை மயக்கம் வரணும்
மதங்கள் கடந்து அனைவரும் குற்றவாளிகள் என்பது சாத்தியமில்லை
சில குற்றவாளிகள் எப்படி மறையைத்தாண்டி இக்கொடுமைக்காகின்றனர்..

# 16ம் பக்க புதிர்ப்போட்டி முடிவுகள்...



| | | | | |
|---|---|---|---|---|
| 23 | 20 | 18 | 8 | 26 |
| 24 | 31 | 7 | 19 | 14 |
| 21 | 9 | 13 | 30 | 22 |
| 15 | 25 | 28 | 11 | 16 |
| 12 | 10 | 29 | 27 | 17 |

## சிரி!...சிரிப்பு!...

1) ஆசிரியர்:- ஏன்டா 15 நாளாய் பாடசாலைக்கு வரவில்லை?..
மாணவன்:- சார்..எங்க அப்பா சொன்னவர் ஒரு இடத்திற்கு அடிக்கடி போனால் மரியாதை இருக்காது என்று!..

2) ஆசிரியர்:- இன்றைய பாடம் எல்லாம் முடிந்துவிட்டது. ஏதும் சந்தேகம் இருந்தால் கேளுங்கள் மாணவர்களே..
மாணவன்:- இராமர்-சீதை இலக்கணமானவர்கள்தான் சார். உங்க பொண்ணு பெயர் என்ன?..சேர்!..

3) ஆசிரியர்:- ஏண்டா ஆணியைக் கையில் வைத்துக்கொண்டு எதைத் தேடுகின்றாய்?..
மாணவன்:- ”ஆணிவேர்” என்று சொன்னீர்களே சார்..அது எந்த ஆணியில் இருக்கிறது என்று தேடுகின்றேன்!..

4) கணவன்:- சீச்சீ இது என்னடி காப்பியா?.. இதை நாய்கூடக் குடிக்காது!...
மனைவி:- ஆமாங்க..அதுதான் நம்ம நாய்க்கு ஹோர்லிக்ஸ் போட்டு வைத்திருக்கிறன்!..



# உய்ய வழியுண்டோ?...

(சிறுகதை)

- கெங்கா ஸ்ரான்லி -

டிரிங் டிரிங் என்று எலாம் அடித்தது. பார்வதி திடுக்கிட்டு முழித்தாள். இரவு நல்ல நித்திரையில்லை, வி- டியும் நேரம் சற்று கண்ணயர்ந்து விட்டாள். நேற்று இரவு மனதில் சஞ்சலம், என்ன செய்வது என்று தெரியாது மனம் தடுமாறி வெம்பி வெடித்தது. அதற்குக் காரணம் அவள் கணவன் சிவம்தான். அந்தப் போராட்டம்தான், எல்லாம் நிறுத்தி விட்டு மளமளவென பம்பரமானாள், காலைக்கடன் முடித்து விட்டு பால்காய்ச்சி பாண் பட்டர் பூசி வைத்துவிட்டு அவர்களை எழுப்பிவிட்டு, பாடசாலை போக ஆயத்தம் செய்து விட்டு தானும் ஒரு கோப்பியைக் குடித்து விட்டு பிள்ளைகள் அப்பாவிடம் போட்டு வாறம் என்று சொல்லி விட்டுச் சென்றனர்.

அவளும் சொல்லி விட்டுப்பிள்ளைகளை பஸ்வண்டிக்கு விட்டு விட்டுதானும் வேலைக்குச் சென்றாள்.வேலை செய்யும் போது அவளால் முடியவில்லை நினை வுகள் எங்கோ சென்றது, பார்வதி படித்து முடித்து விட்டுஆசிரியர் பயிற்சி பெற்று ஆசிரியராகப் பணிபுரிந்தாள். அவளது குடும்பத்தில் இருபெண்கள் இரு ஆண்கள் . ஒருஅண்ணன் பிரான்ஸ், மற்றவர் ஜேர்மனியிலும் இருக்கின்றார்கள். தங்கை பல்கலைக் கழகத்தில் படிக்கின்றாள். இந்த நிலை- லயில் பார்வதிக்கு வரன் பார்த்த வேளையில் புறோக்கர் மூலம் ஜேர்மனியில் ஒரு சம்பந்தம் சரி வந்தது அண்ணனும் நல்ல



பையன் என்று அறிந்து திருமணம் செய்துகொடுத்தனர்.பிறகுமொழி படித்து பாஸ் பண்ணி விசாவும் கிடைத்தது.

ஜேர்மனிக்கும் வந்து வாழ்க்கை தொடங்கி 15 வருடங்கள் ஆகிவிட்டது. இரண்டு பெண் பிள்ளைகள், அனா, வனா இருவரும் 7,8,ம்வகுப்பு படிக்கின்றார்கள். பார்வதியும் வேலைக்கு போகின்றாள் பிள்ளைகளை தமிழ்ப்பாடசாலை நடன, சங்கீத வகுப்பிற்கும் பார்வதியே கூட்டிச் சென்று வருவாள். ஏனெனில் கணவன் உணவகத்தில் வேலை என்ற படியால் அவனுக்கு நேரமில்லை.

இவர்கள் சொந்தமாக ஒரு வீடும் வாங்கி மகிழ்ச்சியாக வாழ்க்கை நகர்ந்தது. சிவம். பிள்ளைகளுடன் வெளியில் போவது கிழமையில் கிடைக்கும் ஒரு நாள் லீவில்தான். அதுவும் சிலசமயம் சனி ஞாயிறு தினங்களில் கொண்டாட்டம் என்றால் சிலசமயம் லீவு கிடைக்கும், சில வேளை கிடைக்காது. அப்போது பார்வதி பிள்ளைகளுடன் செல்வதுண்டு.

இப்படியே குடும்ப வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்க ஒருநாள் பார்வதி கோவிலுக்கு சென்றிருந்தாள், அங்கு சிவத்துடன் வேலைசெய்யும் நண்பன் மனோவைக் கண்டதும் என்ன இன்று வேலைக்குப்போகவில்லையா?

என்க்கேட்க இல்லை இன்று உணவகம் பூட்டு, என்று சொன்னான். என்கணவர் வேலைஎன்று சொல்லிப் போனாரே , என மனோ சிரித்துக் கொண்டு அவன் சில்வியாவுடன் எங்காவது வெளியில் போயிருப்பான் என்று சொல்லி விட்டு டக்கென்று வாயை மூடிக்கொண்டான்,

பார்வதிக்கு முகம் மாறிவிட்டது என்ன லீவா? யார்அந்த சில்வியா என்றாள் உடனே மனோ ஐயோ அக்கா ஒன்றுமில்லை நான் பகிடிக்கு சொன்னேன் என்று விட்டு உடனே சென்று விட்டான். பார்வதிக்கு தலை சுற்றியது, அப்படியே கோவில் வாசலில் கொஞ்ச நேரம் இருந்து விட்டு வீட்டிற்கு வந்தாள்.

வந்தவளுக்கு சமைக்கப் பிடிக்கவில்லை பிள்ளைகள் வருவார்கள் சாப்பாடு செய்ய வேண்டுமே எனச்சமைத்தாள். பிள்ளைகள் வந்தபின் தானும்சேர்ந்து அவர்களுடன் சாப்பிட்டாள். பின் நாளாந்த வேலைகள் பிள்ளைகளின் வீட்டு வேலைகள் என இரவாயிற்று பிள்ளைகள் நித்திரை, சிவம் நேரம் சென்றுதான் வந்தான், இவள் ஒன்றும் கேட்கவில்லை.

அவனும் கொஞ்ச நேரம் தொலைக் காட்சியைப் பார்த்து விட்டு தூங்கி விட்டான், பார்வதி மௌனமாக்க் கண்ணீர் வடித்தாள். அடுத்த நாள் வழமைபோல எல்லா அலுவல்களும் நடந்தன. ஆனால் பார்வதியின் மனதில் போராட்டம். என்ன செய்யலாம் கேட்டால் பிரச்சனை, பிரச்சனை பெரிதாகினால் இருப்பது பெண். பிள்ளைகள் மரியாதைக் கேடு, எனவே இதை எப்படி டீல் பண்ணுவது என்று யோசித்தாள்.

இந்த நாட்டில் பிரிந்து இருப்பது சுலபம், தனிய வாழக்கூடிய வசதி உண்டு. ஆனாலும் அவள் அப்படிச் செய்யவில்லை. முதலில் கணவனது நடவடிக்கையை உறுதிப் படுத்த வேண்டும் யாரோ சொன்னார்கள் என்று நம்பி விடக்கூடாது. எனவே கணவனின் நடவடிக்கையைக் கண்காணிக்கத் தொடங்கி அவன் பின்னால் சென்று வேவு பார்த்தாள்,

மனோ சொன்னது உண்மை, சிவமும் அந்தச் சில்வியா என்ற பெண்ணுடன் உல்லாசமாக சுற்றுவது தெரிந்தது. சரி இதற்கு இனி என்ன செய்யலாம் என யோசித்து கொஞ்ச நாள் இப்படியே பொறுமையாக இருப்போம் என்று வழமைபோல் நடந்தாள். சிவமும் நல்லவன் போல ஒன்றும் தெரியாதவன் போல நடந்தான்.

இப்படியே சிவமும் சில்வியாவிற்கு தேவையான வற்றைச் செய்து கொண்டிருந்ததால் தன் வீட்டிற்கு கட்ட வேண்டிய பில் கட்ட வில்லை அதனால் தண்டனைப் பணம் கட்ட வந்தது, அதைப் பார்த்த பார்வதி ஏன் என்று கேட்டாள் அதற்கு அவன் முதலாளி இந்த மாதம் முழுக்காசும் தரவில்லை அடுத்த மாசம் தருவார் சேர்த்துக் கட்டுகிறேன் என்றான் பார்வதிக்குத் தெரியும் அது பொய் என்று ஆனாலும் ஒன்றும் சொல்ல வில்லை.

கொஞ்ச நாளில் சில்வியா சிவத்திடம் தனக்கொரு கார் வாங்கித் தரும்படி கேட்டாள் சிவமும் ஆசைநாயகி கேட்கிறாள் என்று கடன்பட்டு ஒரு கார் வாங்கிக் கொடுத்தான். அவளும் மகிழ்ச்சியில் அவனை முத்தமழையில்குளிப்பாட்டினாள், சில சமயம் அவனைத் தன்காரில் ஏற்றிச் செல்வாள். எல்லாம் கொஞ்ச நாட்கள் தான் பின் சில்வியா சொன்னாள் தனக்கு வேறு இடத்தில்நல்ல வேலை கிடைத்திருக்கு நல்ல சம்பளம் அதனால் நான் அங்கு போகிறேன் என்றாள்.

சிவத்திற்கு கவலைதான் இருந்தாலும் ஓமென்று சொன்னான் அவள் சொன்னாள் நான் அடிக்கடி வந்து உன்னைப் பார்ப்பேன் என்றதும் மனம் குளிர்ந்து விட்டான். இப்படி ஒருகிழமை வந்தாள் பின் அப்படியே நின்று விட்டாள். சிவமும் அவளுடைய வீட்டிற்குப் போய்ப் பார்த்தான் அவள் வீடும் மாறி ரெலிபோனும் மாற்றிவிட்டாள், அவனும் முயன்று பார்த்தான் தொடர்பு கிடைக்கவில்லை.

அவளோ இளம்வயசு இன்னொரு துணையைத் தேடி இருப்பாள். அறியாத சிவமோ ஏங்கித் தவித்தன். தனிமையில் அழுதான் சொந்த மனைவி வீட்டிலிருக்க இடையில்ஒருத்தியைப் பர்த்து அவள் இடையிலேயே போய்விட்டாளே!இன என்ன செய்ய கடன் வேண்டியது கார் வாங்க அவனும் நெருக்கினான் காசு கேட்டு என்ன செய்வது என்று அறியாது சிவம் கலங்கினான்.

ஏன் இப்படிப் போச்சு என்புத்தி கொஞ்ச நேர இன்பத்திற்காக குடும்பத்தை விட்டு என்ன பிரயோ-சனம் வீட்டிலும் இதனால்பெரிய சுமூகம் இல்லை, வந்தவள் நடித்து மயக்கி காரியம் பெற்று சென்று விட்டாள் ஏமாந்த சிவ-மும் அதில் மயங்கி காசும் போய் குடும்பத்தில் நிம்மதியும் போச்சு.

பார்வதி கெட்டிக்காரி சிவத்தின் செயல் எரிச்சலையும் வெறுப்பையும் தந்தாலும்அவள் விலகிப் பிரிந்து வேறிடம்செல்ல வில்லை, ஒரு கணம்நினைப்பாள் பின் இரண்டு பெண் பிள்ளை களையும் அவர்ககளின் எதிர் காலத்தையும் நினைத்து மௌன-னமாக இருக்கின்றாள்.ஆனால் சிவம் நினைத்தான் தன் லீலைகள் பார்வதிக்குத் தெரியாது என்று, பிள்ளைகளுக்குத் தெரியாது தானே அவர்கள் வழமைபோல் அப்பாவுடன் அன்பாக இருந்தனர். சிவமோ தான் ஏமாற்றப் பட்டுவிட்டேன் என்று மனக் குழப்பம் அடைந்தான். மனோ சிலசமயம் சிவத்தின் நிலை கண்டு சிரிப்பான்.

அழகிய மனைவி அன்பான பிள்ளைகள் இருந்தும் இவருக்கு ஏன் இந்த வேலை . இப்படியே நாட்கள் நகர்ந்தன. இப்பொழுதெல்லாம் சிவம் பார்வதியிடம் அசடு வழிய கிட்ட வருவான் , ஆனால் அவளோ அவனை நெருங்க விடுவதில்லை, கதைப்பாள் எல்லாம் செய்வாள் பிள்ளைகளுக்கு முன்னால் தனிமையில் இருக்கும் போது மௌனியாக இருப்பாள். அது அவனைக் கொல்லும் , ஒருதடவை மனம் நொந்து கெஞ்சினான் , ஆனால் அவள் சொன்னாள் இதோ பாரும் எனக்குத் தெரியாது என்று எல்லாம் செய்தீர் அதனால் கணவன் என்ற அந்தஸ்த்தை இழந்து விட்டீர்..

நாளை இன்னொரு பெண்ணுடன் உல்லாசமாக இருப்பீர், இப்படி மாறும் மனமுடைய உம்முடன் வாழ்வதில் எனக்கு விருப்பமில்லை , ஆனாலும் வாழ்கிறேன் என் பிள்ளைகளுக்காக மற்றது எங்கள் மரபு ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழச்சி நான், நான் அப்படியே வாழ்ந்து விட்டுப் போகிறேன். நீர் எத்தனை பெண்ணுடன் வேணுமென்றாலும் போம் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை,

கண்ணாடி உடைந்தால் எப்படி ஒட்ட முடியாதோ அப்படியே மனமும் உடைந்தால் ஒட்ட முடியாது. எனவே. இதுதான் என் வாழ்க்கை நடித்துக் கொண்டே போகவேண்டியதுதான் என்றாள். சிவம் வாயடத்துப் போய் ஒன்றும் சொல்ல முடியாது திகைத்துப் போய் நின்றான். பெண்ணினமே உனக்கு உய்ய வழியுண்டோ என்னைப்போல் என்றுபார்வதி மனதிற்குள் எண்ணியபடி தனது வேலையில் இறங்கினாள்.

முற்றும்.

# உலகின் முதல் மொழி தமிழ்!...

ஆங்கிலம் கூட தமிழிலிருந்துதான் வந்தது !!! ஆதாரம் இதோ!!!
W.W skeat என்பவர், The Etymological dictionary of the English language இல் உள்ள 14,286 சொற்களில் 12,960 வார்த்தைகள் தமிழிலிருந்து வந்தவை (அதாவது 90% வார்த்தைகள் தமிழிலிருந்து வந்தவை) என்கிறார் ஆய்வின்படி எடுத்துகாட்டுகள் :

Cry - ”கரை” என்ற தூயத் தமிழிலிருந்து வந்தது.
கரைதல் என்றால் கத்துதல். காகம் கரையும் என்பர்.
Clay - களி (களிமண்) என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்தது.
Blare - ”பிளிறு” என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்தது.
Culture - கலைச்சாரம் என்பதிலிருந்து வந்தது
இதுமட்டுமல்ல இலத்தின், கிரேக்கம், யேர்மன் மொழிகள் போன்ற பலவும் தமிழ் மூலத்திலிருந்து வந்தவை பின் ஒன்றோடொன்று கலந்து பல சொற்களை உருவாக்கிக் கொண்டன என்று சொல் ஆய்வாளர்கள் உறுதிசெய்கின்றனர். ஆதாரம் : ” உலகமொழிகளில் தமிழ்ச்சொற்கள்” - ப.சண்முகசுந்தரம். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடு.

தமிழ் உலக மொழிக்கெல்லாம் தாய் மொழி,
உலக கலாச்சாரங்களின் தொட்டில்,
உலக நாகரீகங்களின் ஊற்று,
உலகத்தில் உள்ள மதங்களின் தொடக்கம் தமிழ்!
The mother of all languages is the TAMIL language ; the cradle of all cultures ; all relegions and all civilizations !
தமிழ் மொழியில் இருந்து வந்த ஒரு மொழியே ஆங்கிலம் .
S + பேசு = speach
S + பஞ்சு = sponge
S + மெது = smooth
S + பரவி = spray
S + உடன் = sudden
S + நாகம் = snake
S + சேர்த்தால் (ஸ் சத்தம் )

600 க்கு மேட்பட்ட தமிழ் சொற்களுக்கு ஒரே அர்த்தம் உள்ள ஆங்கில சொற்கள் வரும் ..
உருளை = roll
(கல் கவியல் ஆக கணக்கு பார்க்கும் தமிழர் முறை )
கற்குவியல் = Calculation ; calculatrice .
கொல் = kill ( தமிழில் ”கொ ” வரும் இடத்தில் ” K ” ஆங்கிலத்தில் போட்டால் 100 english word வரும் )
” பொத்தல் ” ல இருந்து பொத்தான் = Button

உலகில் உள்ள , இருந்த அனைத்து மொழிகளிலும் தமிழ் மொழி இருக்கின்றது .ஆங்கிலத்தில் 20% தமிழ் மொழி உள்ளது .ஆங்கிலத்தின் தாய் மொழியான லத்தீன் , நாடு கிரேக்கம் = 50 % தமிழ் மொழி உள்ளது 2015 ஆய்வுகளின் படி ( Germany-ல் உள்ள மொழி ஆய்வு பல்கலைக்கழகத்தில் படிப்பிக்கின்றார்கள். Germany மொழியின் தாய் மொழி சமஸ்கிருதம் என்றும் (ஐரோப்பிய மொழிகளின் தாய் மொழி சமஸ்கிரதம் என்றும் கூறுகிறார்கள்). லத்தீன் , கிரேக்கத்தின் தாய் மொழியான சமஸ்கிரதம் ஒரு தமிழர் கண்ட எழுத்து மொழி.

("நிறைமொழி" மாந்தர் ஆணையில் கிளர்ந்த "மறைமொழி" தானே மந்திரம் என்ப) என்கிறது தொல்காப்பியம்.
நிறைமொழி - தமிழ் மறைமொழி - சமஸ்கிரதம்
- சமஸ்கிரதம் என்றால் அர்த்தம் செய்யப்பட்ட மொழி .
- இயற்கிரதம் ( தமிழ் ) என்றால் அர்த்தம் இயற்கையான மொழி)
சமஸ் + கிரதம் என்றால்: செய்யப்பட்ட மொழி
சம = சமைத்தல் = செய்
கிரதம் = பாஷை = மொழி .
இயற் + கிரதம் என்றால் தமிழ் மொழி(இறை மொழி , இயற்கையான மொழி
இயற் = இயற்கை கிரதம் ஸ்ரீ மொழி
சீனர்களின் மண்டரின் மொழி மற்றும் யூதர்களின் ஹிபுரு"வின் தாய்மொழி அரபி = 65 % தமிழ் மொழி உள்ளது .
கீபுருவின் தாய் மொழி அரமைட் ,
அரபு மொழியின் தாய் மொழி zero-அரமைட் .
அரமைட் , zero-அரமைட் = 80 % தமிழ் மொழி உள்ளது .
தமிழ் மொழி பிறந்த இடத்தில் இருந்து : 1000 வருடங்களுக்கு ஒரு முறை மொழி சிதையும் , மேலும்1000 முஅ க்கு தூரத்திற்கு ஒரே மொழி நிச்சயம் சற்று வேறுபடும்!

" ழ " உச்சரிப்பு தமிழ் , மலையாளம் , மண்டரீன் சீனா ஆகிய மூன்று மொழிகளில் மட்டுமே உள்ளது .
1500 வருடங்களுக்கு முன் தெலுங்கு என்ற ஒரு தனி மொழி இல்லை!
தாய் தமிழகத்தின் ஒரு தமிழ் பகுதியே இன்றைய தெலுங்கு.
"தெள்ளு தமிழ் பாடி தெளிவோனே" என்று முருகனை புகழ்கிறது திருப்புகழ்.
1000 வருடங்களுக்கு முன் கன்னடம் என்ற ஒரு தனி மொழி இல்லை!
தாய் தமிழகத்தின் ஒரு தமிழ் பகுதியே இன்றைய கன்னடம்.
700 வருடங்களுக்கு முதல் மலையாளம் என்ற ஒரு மொழி இல்லை!
தாய் தமிழகத்தின் ஒரு தமிழ் பகுதியே இன்றைய மலையாளம் .

அம்மா , அப்பா என்ற தமிழ் சொல் இன்று உலகில் உள்ள 200 மொழிகளில் உள்ளது .
தமிழில் மட்டும் தான் சொற்களுக்கு பொருள் வரும் :
கட்டுமரம் என்ற தமிழ் சொல் உலகில் உள்ள அனைத்து ( 7102 ) மொழிகளிலும் கட்டுமரம் தான்.

மரத்தை கட்டுவதால் கட்டு மரம். இன்று உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் "கட்டு மரம்" தான்.
தமிழ் மொழியில் உள்ள தொன்மையான நூல்கள் போல வேறு எந்த மொழியிலும் இல்லை .
இன்று இருக்கும் பழமையான நூல்களில், யூத இனத்தில் உள்ள தொன்மையான நூல் "தோரா" (கி.மு 2000 ஆண்டுகள்) ஒன்று மட்டுமே உள்ளது.
,,,,ஆனால் நம் தமிழ் மொழியில் உள்ள தொன்மையான பல நூல்கள்:
கி.மு 1000 ஆண்டுகள் - திருக்குறள்
கி.மு 2000 ஆண்டுகள் - தொல்காப்பியம்
கி.மு 3000 ஆண்டுகள் திருமந்திரம்
கி.மு 5000 பரிபாடல்
கி.மு 7000 அகத்தியம் போன்ற நூல்கள் உள்ளன. மேலும் பழமையான நூல்கள் கடல் கோளாலும், சூழ்ச்சிகளாலும் அழிந்து விட்டன...
...இத்தகைய தமிழின் சிறப்புகளை பகிருவதற்கு தயங்க வேண்டாம்,,,
தமிழ் வாழ்க!!!.

................................................................................................................................................

## பொது அறிவு...

1- உலகில் மிக நீளமான வீதி அமைந்துள்ள இடம் - அலஸ்கா

2- உலகில் அதிகமானோரால் பேசப்படும் மொழி மாண்டரீன் (சீனா)

3- உலகில் அதிகஅளவு அச்சிடப்படும் நூல் - பைபிள்

4- பகவத்கீதை எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது - 55

5- தமிழர் பண்பாட்டைக் கடல்கடந்த நாடுகளில் பரப்பிய பேரரசன் - ராஜேந்திரசோழன்.

6- சுருக்கு எழுத்து முறையைக் கண்டறிந்தவர் - பிட்மேன்

7- உலகில் அதிகமான நாடுகளைக்கொண்ட கண்டம் - ஆபிரிக்கா

8- உலகில் மிகநீளமான நதி நைல். 6.695 கி.மீ) இது வடஆபிரிக்காவிலுள்ள 11 நாடுகள் வழியே பாய்ந்து செல்கின்றது. 2வது நீளமான நதி தென்னமெரிக்காவிலுள்ள அமேசன் நதியாகும்.

9- உலகில் ஆழமான நதி மத்திய ஆபிரிக்காவிலுள்ள கொங்கோ நதியாகும் இதன் ஆழம் 230 மீட்டராகும்.

10- உலகில் உயரமான நீர்வீழ்ச்சி வெனிசூலாவிலுள்ள ஏஞ்சல் நீர்வீழ்ச்சியாகும். இதன் உயரம் 979 மீட்டராகும்.

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்... வணக்கம்!...வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்கிறன்..

கோடைகாலத்தில் பலபேர்தாய் நாட்டுக்குப் போய் வந்திருப்பியள் தானே. பலர் கண்டதெல்லாததையும் திண்டு கொழுத்து நிறைகூடியும் வந்திருப்பிள். இனி என்ன பிரசர், சீனி வருத்தம் கொலஸ்ரோல் என டொக்டர்களிடம் மாறி..மாறிச் செல்ல வேண்டியதுதானே...

ஊருக்குச் சென்றவர்கள் அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடித்தவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் தமது சாதி, சமயம் பார்த்துச் செய்து வைத்தவர்கள், 40, 50, 60, 70 எனப்பிறந்தநாள் கொண்டாடியவர்கள் பல ரகத்தினர் செய்த அட்டகாசங்களோ கண்கொண்டு பார்க்க முடியாது. அந்தளவுக்குக: கொண்டாட்டங்கள் களைகட்டி இருந்ததை உடனுக்குடன் தமிழ் ஊடகங்கள் காட்டிக்கொண்டுதான் இருந்தன பாருங்கோ..

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.

அது அப்படி இருக்கையில் மழை வெள்ளமும் ஏற்பட்டு நாடு முழுவதும் ஒரே அல்லல்தான் உயிரழிவுகள் குறைவு அகதி முகாம்களில்பெருந்தொகையான நமது உறவுகள் பெரும் துயரப் படுகிறார்கள் என்பது உண்மையாகும். அரசாங்கமும் பல தொண்டு நிறு வனங்களும் நல்ல பணிகளைச் செய்கிறார்கள். இவர்களை வாழ்த்த வேணும் பாருங்கோ.

இதில் என்ன செய்தி என்றால் நிவாரணத்தைக் காட்டி நம்மட ஆட்கள் பல மோசடிகளிலும் ஈடுபடுவது வெட்கக் கேடான விடையமாகும். ஏழைமக்களுக்குக் கொடுக்கும் நிவாரண உதவிகளிலும் மோசடி செய்கிறார்கள் என தகவல் இருக்குது பாருங்கோ.

இதில் உண்மை என்ன வென்றால் இந்த முறை மழை வெள்ளத்திற்குப் புலம்பெயர் உறவுகள் நிறையப்பேர் அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். நானும் மண் ஆசிரிருக்கு சிறு தொகை வழங்கினேன் நீங்களும் முடிந்த அளவு உதவிதால் மண் ஆசிரியர் பெருந்தொகைப் பணத்தைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பியதாகச் சொன்னார். அவருக்கு நன்றிகள்... அவருக்கு ஒரு ”ஓ” போடுவம்..

சரி..சரி..இப்படியே அடுக்கிக்கொண்டு போகலாம்.. இனி விசயத்துக்கு வருகிறேன்.. கனக்க இருக்குது இருந்தாலும் நீண்டகாலம் எனது காதைக் குடைந்த விசயம்தான்... என்னவென்றால் இந்த " டைவோஸ்" மணமுறிவு, பிரிவு, விவாகரத்து என்றும் சொல்லுவினம். இதுபாருங்கோ நமது தாய்நாட்டில் குறைவாக இருந்தாலும் புலம்பெயர் நாடுகளில் சரியான மோசம்தான் பாருங்கோ. "வெட்டு ஒன்று துண்டு இரண்டு" என்றமாதிரி உடனடி "டிவோஸ்" மனம் பொறுக்குதில்லையே..

எல்லாவற்றிற்கும் காரணம் பணம், பொருள், பெண் அல்லது ஆண் , சொத்து, நிறம், குணம், கல்வி, அந்தஸ்த்து, பிள்ளைகள், குடும்ப உறவுகள் ஏன் தாய்-தந்தையர்-சகோதரங்களும் காரணமாகி விடுகிறார்கள் என்பதுதான் கவலை இந்த மயிலனுக்கு..

திருமணமான இளம்பெண் தனது மணமுறிவுக்குப் பல குற்றச்சாட்டுகளை அடுக்கினாள். பேசிச் கலியாணம் செய்தாலும் கல்வி, சம்பளத்தில் இருவருக்கும் முரண்பாடு மட்டுமல்ல.. கணவன் தண்ணியடிக்கிறதால தன்னால் சகித்துக்கொள்ள முடியவில்லையாம். இன்னொரு இளம்குடும்பப் பெண் சொன்னாள். அவருக்கு இரண்டு பிள்ளைகள். கணவன் பிள்ளைகளுக்கு அடிப்பதால் தான் விவாகரத்துப் பெற்று விட்டாளாம்.

இன்னொரு தம்பி சந்தேகப் பேர்வழி தனது மனைவி யாரும் ஆண்களோடு கதைக்கக்கூடாதாம். அப்படிக் கதைத்தால் வீட்டில் ஒரே கலவரமாம். யார்?..ஏன்? கதைப்பான் என்று அழுத்தம் மட்டுமல்ல ஒரே சந்தேகப் பிராணியாம் இதனால் குடும்பம் இரண்டுபட்டதாம். இப்ப தனிக்குடித்தனமாம்.

அடுத்தவர் தன்னோடு பிழங்கும் ஆண் பெண் எல்லோரடமும் இயல்பாகவே பேசிப் பழகுவாராம். அது அவரது மனைவிக்குப் பிடிப்பதில்லை..வீட்டுக்கு வந்ததும். யார்?..என்னபேச்சு?..என்ன சிரிப்பு? என அடக்குமுறையாம். இதனாலும் குடும்பம் பிரிவு. பின்னர் விவாகரத்தாம்.

அடுத்தது தாய் தந்தை மகன், மகள் மருமகன் மருமகள் எனக்குடும்பமாக வாழ்பவர்கள் வீட்டிலும் சில்லெடுப்புத்தான். மாமன் மாமியால் வரும் அடக்குமுறைகள் மற்றும் சொத்துப் பிரச்சனைகளாலும் பிரச்சனை. தாய், தந்தையர், மாமன், மாமியை வைத்துப் பார்ப்பதிலும் பிணக்கு ஏற்பட்டு பல குடும்பங்கள் பிரிந்த கதைகளும் ஏராளம் இந்த மயிலன் கேள்விப்பட்டிருக்கிறான் பாருங்கோ...

இப்படிப் பலதரப்பட்ட வாழ்க்கை முறையால் தமிழ்ச்சமூகத்தில் ஏகப்பட்ட பிரச்சனைகளால் இன்று புலம்பெயர் நாடுகளிலும் தாய் நாட்டிலும் தமிழர்கள் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றார்கள். இதனால் பல வயதான குடும்பங்கள் கூடப்பிரிந்து செல்கின்றனர். ஏன் இளம் குடும்பங்களை எடுத்து நோக்கினால் காதலித்துக் கலியாணம் செய்த வர்கள்கூட ஓரிரு ஆண்டுகளில் பிரிகின்றனர். மிகவும் சொற்ப விடயங்களுக்குக்கூட பிரிவது என்று அடம்பிடித்து எதிர்கால வாழ்வை இழந்தவர்கள்கூட ஏராளம்பேரை

இன்னும் சொல்லப்போனால் வயதான ஆண் - பெண் ஒரு வீட்டில் வசிக்கிறார்கள் என்றால் சினிமா, சின்னத்திரைகளைப் பார்ப்பதில் இருவருக்குமிடையே மோதல். மனைவி எந்த நேரமும் ரி வியோடதான். சமையல் சாப்பாடு ஒழுங்கில்லை. புரிசனோடு நேரத்தைச் செலவழிக்கிறதில்லை. எந்தநேரமும் ரி வி பார்த்து கண் கெட்டது மட்டுமல்ல ஒரே இடத்தில் இருந்து நீண்டநேரம் ரி வி பார்த்ததால் ஆளும் நிறைகூடி நடக்கமாட்டாமல் கிடக்கிறா. இதைப்புரிசன் எத்தனை தடவைகள் கண்டித்தும் மனிசி சொல்கேட்காததால் இருவரும் அடிபாடுபட்டு இறுதியில் பொலிஸ் கேஸ் என்று போய் இப்ப இருவரும் பிரிந்து வாழ்வதே முடிவாகியிருக்கின்றது.

அடுத்தது ஊரிலுள்ள காணி சொத்துக்களை எந்தப் பிள்ளைக்குக் கொடுப்பது என்ற பங்கு பிரிப்பில் பிள்ளைகளிடையே மருமக்களிடையே மோதல் ஏற்பட்டுப் பிரிந்து வாழும் குடும்பங்களும் ஏராளம்பேர். இதனால் சில குடும் பங்களில் தாய்-தந்தை மற்றும் மகன் - மருமகள், மகள் - மருமகன் விவாகரத்துப் பெற்று வாழ்பவர்களும் இருக்கிறார்கள்.

இப்படி பலதரப்பட்ட விவாகரத்துப் பெற்றவர்களை இந்த மயிலன் கண்டுகோண்டு நெஞ்சு பொறுக்குதில்லையே..யாருக்குச் சொல்லி அழ..யாருக்கெடுத் துரைப்பது. உங்களுக்காவது சொல்லிப் புலம்பலாம் என்றுதான் இந்த மயிலன் சொல்கிறான். இதை நீங்கள் அலட்சியம் செய்யமாட்டீர்கள் என இந்த மயிலனுக்குத் தெரியும்...

நல்ல விசயங்களை உங்களோடு பகிர்ந்துகொண்டால் இந்தமயிலனுக்கும் ஒரு ஆறுதல்தான். ஏன் ஆறுதல் என்றால் என்ர மகளும் இப்படியான பிரச்சனைகளால் அவளும் வாழவேண்டிய வயதில் விவாகரத்துப் பெற்றுத்தான் வாழ்கிறாள். வெளிநாடுகளில் விவாகரத்துப் பெற்று வாழ்ந்தால் ஆடம்பரமாக வாழலாம் என்றும் பலர் யோசிக்கிறார்கள். காரணம் விவாகரத்து என்றால் பிள்ளைகளுக்கும் அரசாங்கம் நல்ல சலுகைகளை வழங்குமாம். இதனாலும் சிலர் பிரிவதென்று அதாவது சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் கோபப்பட்டுக் கொண்டு பிரிந்தவ ர்களையும் இந்த மயிலன் நேரே கண்டிருக்கிறான் பாருங்கோ...

ஏன் இந்த அலங்கோல வாழ்க்கை பொறுமை, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மைகளை இருவரும் கடைப்பிடிக்க வேண்டும். பணம், பொருள், சொத்துப் பேராசையைத் தவிர்த்தல் வேண்டும். ஆண்களும் பெண்கள் விவகாரங்களில் கவனமாக இருக்கவேண்டு. அதேபோல் பெண்களும் ஆண்கள் விடயங்களில் கவனமாக இருக்க வேண்டும். ஏன் இதை இந்த மயிலன் சொல்கிறான் என்றால் நாங்கள் விடும் தவறுகளை நமது சந்ததிகளும் பிரிந்துவாழும் நிலைக்குச் சென்றுவிடுவார்கள் என்பதை நாம் மனதில் பதிக்க வேண்டும். இல்லையேல் இந்தப்பூமி தனிமனித உலகமாக மாறிப் பெரும் அவலங்களைத்தான் சந்திக்கும். ஆண்-பெண் இருவரிடமும் தவறுகள் ஏற்படலாம். அந்தத் தவறுகளிலிருந்து மீண்டெழுந்து வாழ்க்கையைச் செப்பனிட்டு வாழ்வதே நல்லது. என்று கூறி அடுத்த விடயத்தோடு இந்த மயிலன் வருவான். அப்ப வாறன்.. எல்லாரும் சுகமாயிருங்கோ!...

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| ந | ல் | நெ | றி |
| ண் | க | ய் | பா |
| டு | ரி | த | டி |
| நா | வ | ல் | பா |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தை | ப் | பொ | ங் | க | ல் | வி |
| ந் | ம் | ட | ட் | வ | ன் | னி |
| ஆ | ட | ம் | ப | ர | ம் | ன் |
| ல | டு | ண் | க | ற் | க | க |
| ம | ன் | னா | ர் | து | ண | ர் |
| ர | தை | வி | க | ம் | ண் | ண் |
| ம் | வ | ண | ஆ | பி | வி | ன் |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 5 | 3 | 8 | 2 | 7 | 4 | 9 |
| 2 | 4 | 9 | 5 | 1 | 7 | 8 | 6 | 3 |
| 3 | 7 | 8 | 6 | 4 | 9 | 1 | 2 | 5 |
| 9 | 5 | 2 | 1 | 3 | 8 | 6 | 7 | 4 |
| 8 | 3 | 7 | 9 | 6 | 4 | 5 | 1 | 2 |
| 4 | 1 | 6 | 2 | 7 | 5 | 9 | 3 | 8 |
| 7 | 8 | 3 | 4 | 5 | 1 | 2 | 9 | 6 |
| 6 | 2 | 1 | 8 | 9 | 3 | 4 | 5 | 7 |
| 5 | 9 | 4 | 7 | 2 | 6 | 3 | 8 | 1 |

# மரக்கறிகளை விரும்பி உண்டால் ஆயுள்கூடும்...



## - சிவப்புப் பழங்கள் -

# Red Fruits Name




சிவப்பு உருளைக்கிழங்கு பழவகைகளில் அடங்காவிடினும் சிவப்பு உருளைக்கிழங்கும் உண்டு....

## தினமும் நடைப்பயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகள்...

01- எடை குறைக்க உதவுகின்றது.
02- நுரையீரல் திறனை அதிகரிக்கின்றது.
03- இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றது.
04- நாட்பட்ட நோய்களை குறைக்கின்றது.
05- மனநிலையை மேம்படுத்துகின்றது.
06- புற்றுநோய் வராமல் தடுக்கின்றது.
07- வயதான காலத்தில் இயலாமையைத் தடுக்கின்றது.
08- முதுமையைத் தாமதப் படுத்துகின்றது.
09- சுருள் சிரை நாளங்களை மேம்படுத்துகின்றது.
10- இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றது.
11- நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது.
12- பெண்களுக்குப் பக்கவாதம் ஏற்படுவதை குறைக்கின்றது.
13- செரிமானத்தைத் துரிதப்படுத்துகின்றது.
14- கண்புரை நோயின் அபாயத்தைக் குறைக்கின்றது.

.......................................................................................................

## ஊறவைத்த பாதாம் பருப்பின் நன்மைகள்...

(தினமும் 5 ஊறவைத்த பாதாம் பருப்பைச் சாப்பிடுவதால் இவ்வளவு நன்மைகள் உண்டு)

01- பித்தப்பை கற்களைக் கட்டுப்படுத்தும்.
02- புற்றுநோய் வராமல் தடுக்கும்.
03- இரத்தத்தில் வெள்ளை மற்றும் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையை வேகமாக அதிகரிக்கும்.
04- சருமப் பொலிவை அதிகரிக்கும்.
05- முகச்சுருக்கத்தைப் போக்கும்.
06- மலச்சிக்கலை நீக்கும்.
07- இதய நோயைக் கட்டுப்படுத்தும்.
08- எலும்புகள் மற்றும் தசைகள் வலுப்பெற உதவும்.
09- சுவாசக் கோளாறுகளை நீக்கும்.
10- சர்க்கரை நோய் மற்றும் இரத்தச் சோகை நோயைப் போக்கும்.

.......................................................................................................

## மனித உடல் இறந்த பின்...

மனிதன் உயிரிழந்தபிறகு அவனது உறுப்புக்கள் உயிரோடுஇருக்கும் காலம்

| | | |
|---|---|---|
| 01- | கண் | - 31 நிமிடங்கள் |
| 02- | மூளை | - 10 ” |
| 03- | கால் | - 04 மணி நேரம் |
| 04- | தசை | - 05 நாட்கள் |
| 05- | இதயம் | - 04 - 06 மணிநேரம் |
| 06- | நுரையீரல் | - 04 - 06 ” |
| 07- | கல்லீரல் | - 08 - 12 ” |
| 08- | கணையம் | - 24 - 36 ” |
| 09- | சிறுநீரகம் | - 24 - 36 ” |





## 38 நாய்களுடன் நடந்து கின்னஸ் சாதனை

கனடாவை சேர்ந்த இளைஞர் ஒருவர் ஒரே நேரத்தில் 38 நாய்களுடன் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடை பயிற்சியில் ஈடுபட்டு கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் ஒரே நேரத்தில் 36 நாய்களுடன் நடைபயிற்சியில் ஈடுபட்டு படைக்கப்பட்டிருந்த சாதனையை மிட்செல் ரூடி என்ற இந்த இளைஞர் முறியடித்துள்ளார். இவரது பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

இந்த சாதனைக்கு பயன்படுத்தப்பட்ட அனைத்து நாய்களும் இறைச்சி கடை-களில் இருந்தும், வீதியோரங்களில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.




## "ரைற்றானிக்" கப்பல்கடிகாரம் 16 கோடி

1912ம் ஆண்டு வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலின் சிக்கிய " ரைற்றானிக் " கப்பல் விபத்தில் 2.200 பேர் பயணம் செய்த நிலையில் 1.500 பேர்வரை கடலில் மூழ்கிப் பலியான செய்தி அனைவராலும் அறியப்பட்டதாகும். 705 பயணிகள் உயிருக்குப் பே-ாராடிய நிலையில் அவர்களைக் காப்பாற்றிய பெருமை கப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரானையே சாரும்.

இந்தக் கப்டனுக்கு அப்போது பரிசாக வழங்கப்பட்ட கடிகாரம் தற்போது லண்டனில் ஏலம் விடப்பட்டபோது 16 கோடி ரூபா( இந்திய ரூபா மதிப்பில்) ஏலம் எடுக்கப்பட்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. "ரைற்றானிக்" நினைவுச் சின்னங்கள் ஏலம் விட்டதில் மிக அதிக தொகைக்கு வாங்கப்பட்ட கலைப்பொருள் என்ற பெருமையை-யயும் சாதனையையும் இந்தக் கடி-காரம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.






## வவுனியா 17 வயது மாணவனின் சாதனை...

இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் ஒன்றைக் கண்டு பிடித்துக் காட்சிப்படுத்திய வவுனியாவைச் சேர்ந்த சிவதேவன் கபிலாஸ் (வயது 17) தேசிய மட்டத்தில் முதலாவது இடம்பிடித்துச் சாதனை படைத்திருக்கிறார். அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டியில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த இவர் கொழும்பில் நடைபெற்ற போட்டியிலேயே அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பிடித்திருக்கிறார்.

இந்த இயந்திரத்தைத் தயாரிக்க வேண்டிய பொருட்கள் வவுனியாவில் கிடைக்காதபடியால் கொழும்புக்குச் சென்று அப்பொருட்களை வேண்டிவந்து கடும் முயற்சி, உழைப்பால் இதைக் கண்டுபிடித்துச் சாதனை படைத்த மாணவனை வாழ்த்துகின்றோம்...

## உலக அழகியான டென்மார்க் மங்கை...

2024ம் ஆண்டிற்கான உலக அழகுராணிப் போட்டியில் டென்மார்க் நாட்டின் 21வயதுடைய அழகி விக்டோரியா கெயர் மகுடம் சூட்டினார். மெக்ஸிக்கோவில் நடைபெற்ற 73வது உலக அழகுராணிப் போட்டியில் நூற்றுக்கணக்கான நாடுகளின் அழகிகள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர்.






## உலகின் மிக வயதான மனிதர் காலமானார்.

உலகின் மிக வயதான மனிதர் எனக் கருதப்பட்டவர் பெயர் ஜோன் டினிஸ்வுட் தனது 112வது வயதில் 27.11.2024 அன்று காலமானார். இங்கிலாந்து நாட்டவரான இவர் 1912ம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தார் 1942ம் ஆண்டு திருமணம் செய்தவர். இரண்டு உலகப் போர்களையும் இரண்டு பெரும் தொற்று நோய்களிலிருந்தும் தப்பிப் பிழைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்..

## அதிகூடிய தூர விமானப் பயணங்கள்...

### தூரமும் சென்றடைய எடுக்கும் நேரமும்

| | | |
|---|---|---|
| 1. Singapore - New York | 15,348 | 18 hrs 50 mins |
| 2. Singapore - Newark | 15,326 | 18 hrs 45 mins |
| 3. Perth - London | 14,500 | 17 hrs 15 mins |
| 4. Melbourne - Dallas | 14,471 | 17 hrs 35 mins |
| 5. Auckland - New York | 14,207 | 17 hrs 50 mins |
| 6. Dubai - Auckland | 14,201 | 17 hrs 10 mins |
| 7. Singapore - Los Angeles | 14,114 | 17 hrs 50 mins |
| 8. Bangalore - San Francisco | 14,003 | 17 hrs 40 mins |
| 9. Darwin - London | 13,873 | 17 hrs 55 mins |
| 10. Houston - Sydney | 13,834 | 17 hrs 35 mins |

# அன்றும்!...இன்றும்!....

அன்று
ஒரு அறை உள்ள வீட்டில் ஐந்து பத்து பேர் ஒன்றாக வாழ்ந்தோம்
இன்று
ஐந்து பத்து அறை உள்ள வீட்டில் ஒருவர் இருவர் மட்டும் வாழ்கிறோம்
அன்று
ஆயிரம் பேருக்கு உதவி செய்தவன் யாரிடமும் விளம்பரம் இல்லாமல் வாழ்ந்தார்
இன்று
ஒரு நபருக்கு உதவி செய்தவனை ஆயிரம் பேர் தெரிந்து கொள்கிறார்கள்
அன்று
வயிறு நிரப்புவதற்காக பல கிலோமீட்டர் தூரம் நடந்து வேலைக்கு சென்றோம்
இன்று
வயிறு குறைப்பதற்காக பல கிலோ மீட்டர் தூரம் நடைப்பயிற்சி செய்கிறோம்
அன்று
வாழ்வதற்காக சாப்பிட்டோம்
இன்று
சாப்பிடுவதற்காக வாழ்கிறோம்
அன்று
வீட்டிற்குள் உணவருந்திவிட்டு கழிவறையை வெளியே பயன்படுத்தினோம்
இன்று
வெளியே உணவருந்திவிட்டு கழிவறையை வீட்டுக்குள் பயன்படுத்துகிறோம்
அன்று
மானம் காப்பதற்காக உடை அணிந்தோம்
இன்று
மானத்தை வெளியுலகத்திற்கு காட்டுவதற்காக உடை அணிகின்றோம்
அன்று
கிழிந்த ஆடைகளை தைத்துப் பயன்படுத்தினோம்
இன்று
புதிய ஆடைகளை வேண்டிக் கிழித்துப் பயன்படுத்துகிறோம்
அன்று
இருப்பதை வைத்து பண்டிகைக் காலத்தை கொண்டாடினோம்
இன்று
பண்டிகைக்கு ஏற்றது போல் பகட்டுக்காகக் கொண்டாடுகிறோம்
அன்று
ஆசிரியரிடமிருந்து உதை வாங்காமல் இருக்க மாணவர்கள் ஆண்டவனை வேண்டினார்கள்
இன்று
மாணவர்களிடமிருந்து உதை வாங்காமல் இருக்க ஆசிரியர்கள் ஆண்டவனை வேண்டுகிறார்கள்
நாம் கடந்து வந்த பாதை திரும்பிப் பார்ப்பதற்கு 40 வயதை கடந்த நம்மால் மட்டுமே முடியும்!......

# எப்பவோ எழுதிய வரிகள் சில...

**நீதியைத்தேடு...**
பாதி உயிர் பிரியும் போதும்
சாதியினைத் தேடுகின்றான் தமிழன்
நீ உலகில் வாடுகின்றாய்..
பிறப்பும் இறப்பும் அறிந்தவன் இல்லை
அறிந்தவன் எவனும் பிறந்ததும் இல்லை
பிறப்பை வைத்து தரத்தைப் பிரிக்கும்
மனிதா உலகில் பிறந்தது தொல்லை
சாதியைத் தேடாதே நீதியைத் தேடு...

**நாடு...**
நாடுவிட்டு நாடழிக்க வந்தவரால்
வீடு விட்டு காடுகாடாய்
தேடுவாரற்று அலைகிறோம்
கட்டுவிட்டு எம் உயர் பிரிந்தாலும்
கோடுவிட்ழியாது எமது பாதை...

**வகைசெய்வோம்...**
சதிகள் பல செய்திங்கு சந்ததியை அழிக்கின்றாய்
வதிவிடங்கள் இல்லாது தமிழர்களைக் கலைக்கின்றாய்
விதி என்று நாம் நினைத்தால் வீரத்தினை மறந்திடுவோம்
மதி கொண்டு நாம் உன்னை ஓடிடவே வகை செய்வோம்...

**ஒப்பந்தம் வரும்...**
சந்தியில் நின்று நீ அன்று வதைத்தாய்
இந்தியில் பேசி நீ அன்று உதைத்தாய்
மந்திகள் உன்னிடன் சேர்ந்து நின்றதனால்
சிந்திப்பதற்கு ஒன்றும் இல்லையடா உனக்கு...
ஒப்பந்தம் ஒன்றெழுதி தமிழினத்தை ஒடுக்கினாய்
நிர்ப்பந்தம் ஆனாலும் விடமாட்டோம் நிறைவேற
வீண் பந்தம் பிடிப்பவர்கள் எம்மத்தியில் இருப்பதனால்
எரிபந்தம் போன்றதொரு ஒப்பந்தம் வரும் என்றாய்...

**வாய்க்கரிசி...**
கண்ணிலே நீரின்றி கதறுகின்ற வேளையிலே
விண்ணிலே நீ வந்து போட்டுவிட்டாய் எமக்கயிறு
எண்ணியே நாம் உன்னை வாயாரப் புகழ்ந்திடவே
மண்ணிலே நீ வந்து போட்டதேனோ வாய்க்கரிசி...

**செல்லாத இடம்...**
சொல்லொன்று செயல் ஒன்று செய்திடுவாய் எம்மை
பொல்லாத துயர்தனில் மாய்ந்து மடிய வைப்பாய்
செல் கொண்டே தமிழினத்தை அழித்திடுவாய் - நாம்
செல்லாத இடம் எல்லாம் செல்ல வைத்தாய் அன்று...

**- கவிஞன் பரதன் -**


TRINKHALLE
Getränke · Spirituosen
Süsswaren · Tabakwaren
Stehcafe


Ruhr Nachrichten
TRINKHALLE
Stehcafe


Stehcafe
Ruhr Nachrichten


தமிழர் அரங்கம்

# யேர்மனியில் திருவள்ளுவர் சிலை...

- வி சபேசன் -

யேர்மனியின் டோட்முண்ட் நகரில் திருவள்ளுவர் சிலை 07.12.2024 அன்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. அஸ்ரிறிட் கிறேமர் (மேற்கு டோட்முண்ட் நகரத்தலைவர்), வோல்கான் பாறன் (மாநில நாடாளுமன்ற உறுப்பினர்), நல்வ் ஸ்ரோல்ஷ (மாநில நாடளுமன்ற உறுப்பினர்), ஓலாவ் மயர் (மேற்கு டோட்முண்ட் பிரதி நகரத்தலைவர்) ஆகிய நால்வரும் இணைந்து திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்தார்கள்.

கத்தரீனா பொக் என்னும் பெண் சிற்பக் கலைஞரே திருவள்ளுவர் சிலையை வடிவமைத்தார். திருவள்ளுவர் சிலையை செய்த முதலாவது பெண்ணாகவும், முதலாவது வெள்ளை இனத்தவராகவும் கத்தரீனா பொக் அவர்களே இருப்பார் என்று நம்புகிறேன். மேற்குலகில் பெருவீதி ஒன்றில் அமைந்திருக்கும் முதலாவது திருவள்ளுவர் சிலையாகவும் இது இருக்கக் கூடும்.

எல்லோரும் இணைந்து இப் பெரும்பணியை 5 ஆண்டுகளுக்குள் சாதித்திருக்கிறோம். கொரோனா காலத்தை கழித்தால் 3 ஆண்டுகள் மட்டுமே. “தமிழர் அரங்கம்“ இப்பணியை முன்னெடுத்திருந்தாலும், பல்வேறு அமைப்புக்கள், ஊடகங்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், வர்த்தகர்கள் என்று பலர் எம்மோடு கைகோர்த்து இணைந்து செயற்பட்டார்கள். இப்படி ஒரு அணியாக நின்றதனாலேயே இது சாத்தியமானது.இப் பெரும் பணியை ஒருங்கிணைப்பு செய்தவர்கள் என்னும் வகையில் என்னையும் என்னுடைய மனைவி கலைநிதி அவர்களையும் பாராட்டிக் கவுரவித்தார்கள். அதை நாம் ஏற்றுக் கொண்டோம்.மிகுந்த மனநிறைவோடு இருக்கின்றேன்.

இனிக் கொஞ்சம் ஓய்வெடுக்கலாம். திருவள்ளுவர் சிலைக்கு வண்ணம் தீட்டுவது, மேடையை அழகுபடுத்துவது, சுற்றி வர பூக்கன்றுகளை நடுவது போன்ற சிறிய வேலைகளே இன்னும் இருக்கின்றன. அவைகள் தம்பாட்டில் நடைபெறும். இப் பெரும் பணிக்கு யாரேல்லாம் துணையாக நின்றார்கள், எப்படியான பணிகளை முன்னெடுத்தார்கள், ஏற்பட்ட தடைகள் என்ன, எப்படியான நிதி உதவிகள் வந்தன என்பதை “திருவள்ளுவர் டோட்முண்ட் வந்த வரலாறு“ என்னும் பெயரில் ஒரு புத்தகமாக எழுத உள்ளேன்.

திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பகுதியை “வள்ளுவர் சந்தி“ (ஏயடடரஎயச ஏநைசவநட) என்று நம் இனி அழைப்போம். சிலை அமைந்துள்ள வீதி “வள்ளுவர் வீதி“ என்று எதிர்காலத்தில் பெயரிடப்பட வேண்டும் என்று ஒரு கனவு உண்டு. அந்தக் கனவை இளம் தலைமுறையிடம் கொடுக்கிறேன்.


BOC







# சிறீலங்காவில் மழைவெள்ளப் பேரழிவு..

நமது தாய்நாட்டில் 2024 கார்த்திகை மாதம் பெருமழை வெள்ளம் ஏற்பட்டதில் மிகப் பாரிய அழிவுகள் நாடு முழுவதும் ஏற்பட்டன. இந்த அழிவுகளின் சிறு குறிப்புகளைப் பார்ப்போம்.

- 24 மாவட்டங்களில் இந்தப் பாதிப்பு ஏற்பட்டன. 18 பேர் இறப்பு.

- 1.38.944 குடும்பங்களைச் சேர்ந்த 4.65.746 பேர் பாதிப்பு

- 980 வீடுகள் முற்றாகவும் 2.353 வீடுகள் பகுதியாகவும் இடியுண்டுள்ளன.

- 345 இடைத் தங்கல் முகாம்களில் 8.984 குடும்பங்களைச் சேர்ந்த 29.596 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

- 3.75.000 ஏக்கர் பயிர்செய் நிலங்கள் முற்றாக அழிந்துள்ளன.

- நாடு முழுவதும் 130 குளங்கள் உடைப்பெடுத்தபடியால் பெரும் சேதம்.

- வவுனியா மாவட்டத்தில் மட்டும் 42 சிறிய குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

- வடக்கு கிழக்கில் பெரும் அழிவுகளை மன்னார் மாவட்டம் சந்தித்துள்ளது.

2025 ஆண்டின் தைமாதம் மழை இன்றி இயல்பு நிலைக்கு வந்தாலும். பாதிக்கப்பட்டு இன்றும் லட்சக்கணக்கான மக்கள் இடைத்தங்கல் முகாம்களிலேயே வாழவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இவர்களின் உணவு, உடை, உறைவிடம், கல்வி, சுகாதாரம், வேலை, பொருளாதாரம் என அனைத்து இயல்பு வாழ்வும் இழந்து பரிதவிக்கிறார்கள். வீட்டை இழந்தவர்கள், பயிர் நிலங்களை இழந்தவர்கள் மீளக்குடியேறமுடியாத நிலையே காணப்படுகின்றது.

புதிய அரசாங்கமும் பல நூறு தொண்டர் அமைப்புகளும் பலவகையான நிவாரண உதவிகளை வழங்கிவருவது சிறப்பான விடயமாகும் இவர்களுக்குப் பெரு நன்றிகள். இருந்தபோதும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணம் கிடைக்கவில்லை என்பது தெரியவருகின்றது. ஆகவே புலம்பெயர் உறவுகள் தம்மாலான நிதி, பொருள் உதவிகளைச் செய்யவேண்டும். இதுதான் மனித நேயம், மனித தர்மம் ஆகும்.

மண் சஞ்சிகையின் வாசகர்கள் மற்றும் மனிதநேயம் மிக்கவர்களின் நிதி உதவிகளால் இந்த அனர்த்தத்துக்கு 6 லட்சம் ரூபாவரையில் 10.12.2024 வரை பல பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தோம். இப்பணி தொடர்கின்றது.. ஆதரவுக்கரம் தாரீர் உறவுகளே!... - ஆசிரியர்-

# பொது அறிவுத் தகவல்கள்...

01- பூச்சி இனங்களில் அறிவு மிக்கது-எறும்பு

02- தேனீக்கு இரு இரைப்பைகள் உள்ளன ஒன்று சேமிப்பு அறையாகவும் மற்றது ஜீரண உறுப்பாகவும் அமைகிறது

03- ஆமைக்கு பற்கள் கிடையாது

04- காகங்கள் இல்லாத நாடுகள்-நியூசிலாந்து,அண்டார்டிகா,தென் அமெரிக்கா

05- தோலினால் சுவாசிக்கும்,கண் இல்லாத உயிரினம்-மண்புழு

06- வயிற்றில் பல் உள்ள உயிரினம்-நண்டு

07- கான்சர் நோய் வராத கடல் உயிரினம்-சுறா

08- ஆண் குட்டி போடும் கடல் உயிரினம்-கடல்குதிரை

09- தெரு நாய்கள் இல்லாத நாடு-நெதர்லாந்து

10- புகையிரதம் இல்லாத நாடு-பூட்டான்

**- ஜெயா நடேசன் -**

..............................................................................................

## தகவல்துளிகள்...யேர்மனி......

01.01.1984- RTL தொலைக்காட்சி தலைநகர் பேர்ளினில் ஆரம்பிக்கப்பட்டது.

07.07.1985- ரெனிஸ் விளையாட்டில் யேர்மனிய வீரரான பொறிஸ் பெக்கர் (Boris Becker) தனது 17 வயதில் முதன்முறையாக விம்பிள்டன் ரெனிஸ்போட்டியின் வெற்றிக்கிண்த்தைப் பெற்றார்.

19.04.2005- யேர்மனியரான புனித பாப்பரசராக பெனடிக்ற் (Benedikt XVI பதவி ஏற்றார்.

22.04.2005- யேர்மனியின் முதல்ப்பெண் கான்சிலாரா (அதிகூடிய அதிகாரம் கொண்ட அரசதலைவர்) அங்கலா மார்க்கல் பதவி ஏற்றார்.

13.08.1961- கிழக்கு-மேற்கு யேர்மனியைப் பிரித்த தடுப்பு மதில்ச்சுவர் கட்டப்பட்டது.

09.11.1989- கிழக்கு-மேற்கு யேர்மனியைப் பிரித்த தடுப்பு மதில்ச்சுவர் தலைநகர் பேர்ளினில் இடிக்கப்பட்டது.

## உலகின் நிலப் பரப்பில் பெரிய நாடுகள்...

### 10 Largest Countries by Land Area

Russia - 17.1 million $km^2$

Canada - 9.98 million $km^2$

China - 9.60 million $km^2$

United States - 9.53 million $km^2$

Brazil - 8.51 million $km^2$

Australia - 7.74 million $km^2$

India - 3.29 million $km^2$

Argentina - 2.78 million $km^2$

Kazakhstan - 2.72 million $km^2$

## உலகின் மிகப்பெரிய நகரங்களின் சனத்தொகை

### Most Populated Cities in the Wor

Tokyo, Japan – 37.1 million

Delhi, India– 33.8 million

Shanghai, China – 29.8 million

Dhaka, Bangladesh – 23.9 million

São Paulo, Brazil – 22.8 million

Cairo, Egypt – 22.6 million

Mexico City, Mexico – 22.5 million

Beijing, China– 22.2 million

Mumbai, India – 21.7 million

Osaka, Japan – 19 million

 

# பாடகர் அமரர் ஜெயச்சந்திரன்

(03.03.1944 - 09.01.2025)

மூன்று தலைமுறை நடிகர்களுக்கு பாடல்கள் பாடி உள்ள பழம்பெரும் பின்னணிப் பாடகர் பி ஜெயச்சந்திரன் தன்னுடைய 80-வது வயதில் உடல்நல குறைவு காரணமாக உயிரிழந்தார். இவர் யார்? என்னென்ன பாடல்கள் பாடியுள்ளார் என்பதை இந்த தொகுப்பில் பார்ப்போம்.

இதுவரை சுமார் 16,000 மேற்பட்ட பாடல்களை, தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், மற்றும் ஹிந்தி மொழிகளில் பாடியுள்ளவர் பி.ஜெயச்சந்திரன். தமிழில் மட்டும் சுமார் 1000-திற்கும் மேற்பட்ட பாடல்களை பாடி உள்ள இவரின் பாடல்களுக்கு தற்போது வரை ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். மண்ணை விட்டு மறைந்தாலும், மனதை விட்டு நீங்காத பாடல்களை பாடியுள்ள இவர் ஜெயச்சந்திரன் யார் தெரியுமா?

ஜெயச்சந்திரன் என இவரது பெயரை கேட்டதுமே, பலர் இவர் தமிழ்நாட்டை சேர்ந்தவர் என நினைக்கலாம். ஆனால் அவர் ஒரு மலையாளி. 1944 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3-ஆம் தேதி கேரளாவில் பலியத்து ஜெயச்சந்திர குட்டன் என்கிற பெயரோடு பிறந்தார். திரைத்துறைக்கு வந்த பின்னரே இவருடைய பெயர் ஜெயச்சந்திரன் என மாறியது.

1958-ஆம் ஆண்டு, கேரள மாநிலத்தில் நடந்த, இளைஞர் திருவிழாவில் கலந்து கொண்டு மிருதங்கம் வாசித்த இவர், 14 வயதிலேயே சிறந்த மிருதங்க கலைஞருக்கான விருதை பெற்றார்இதுவே இவருக்கு பாடல்கள் மீது ஆர்வம் வர காரணமாக மாறியது. பாடல்கள் பாடுவதிலும் ஆர்வம் காட்டிய ஜெயச்சந்திரன், தன்னுடைய 23வது வயதில் “உத்யோகஸ்தா“ என்கிற மலையாள படத்தில் பின்னணி பாடும் வாய்ப்பை பெற்றார். இவர் பாடிய முதல் மலையாள பாடலே நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், இவருடைய குரல் மிகவும் பிரபலமானது. இதை தொடர்ந்து, 1973-ஆம் ஆண்டு “மணிப்பயல்“ என்கிற திரைப்படத்தின் மூலம், தமிழில் இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனால் பின்னணி பாடகராக அறிமுகப்படுத்தப்பட்டார்.

இந்த படத்தில் இவர் பாடிய "தங்க சிமிழ் போல்" என்கிற பாடல் நல்ல வரவேற்பை பெற்றது. மலையாளம் இவருடைய தாய் மொழி என்றாலும், தமிழில் இவருடைய உச்சரிப்பு மிகவும் தெளிவாக இருந்தது. எனவே இவரை தன்னுடைய இசையில் பாட வைக்க இளையராஜா முதல்கொண்டு பல இசையமைப்பாளர்கள் ஆர்வம் காட்டினார்.

குறிப்பாக "மூன்று முடிச்சு" படத்தில் இடம்பெற்ற வசந்த கால நதிகளிலே, "கிழக்கே போகும் ரயில்" படத்தில் இடம்பெற்ற மாஞ்சோலை கிளிதானோ.., "கடல் மீன்கள்" படத்தில் இவர் பாடிய தாலாட்டுதே வானம்... போன்ற பாடல்கள் அடுத்தடுத்து சூப்பர் ஹிட் வெற்றி பெற்றன. மேலும் ராசாத்தி உன்ன காணாத நெஞ்சு, பூவை எடுத்து ஒரு மாலை தொடுத்து வச்சேனே, மயங்கினேன் சொல்ல தயங்கினேன், கடவுள் வாழும் கோவிலில், வசந்த காலங்கல், மவுனமான மயக்கம், சின்னபூவே மெல்லபேசு, கன்னத்தில் முத்தமிட்டல், போன்ற பல பாடல்களை பாடினார். இவர் பாடிய பாடல்கள் பெரும்பாலும் SPB பாடியதாகவே தற்போது வரை பல ரசிகர்கள் நினைக்கின்றனர். ஆனால் இந்த பாடல்களின் குரலுக்கு சொந்தக்காரர் ஜெயச்சந்திரன்.

1970, 80, 90 முதல் 2020 ஆம் ஆண்டு வரை சுமார் 3 தலைமுறை நடிகர்களுக்கு பாடியுள்ள பி ஜெயச்சந்தித்ரன் கடைசியாக 2020 ஆம் ஆண்டு வெளியான வன்முறை திரைப்படத்தில்" சின்ன பூவே" என்கிற பாடலை பாடினார். அஜித், விஜய், போன்ற முன்னணி நடிகர்களுக்கும் பாடி உள்ளார். 80-வது வயதை எட்டினாலும் உடல் ஆரோக்கியத்துடன் இருந்த இவர், 2025 தை 9ம்திகதி மாலை 7 மணி அளவில், பூங்குன்னத்தில் உள்ள அவருடைய வீட்டில் திடீரென மயக்கமடைந்ததாக கூறப்படுகிறது. அவரின் குடும்பத்தினர், உடனடியாக இவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஜெயச்சந்திரன் ஒரு தேசிய விருது உட்பட, 5 கேரள மாநிலத்தின், விருது 5 தமிழ்நாடு அரசின் விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளை பெற்றுள்ளார். கலைமாமணி விருதையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

..........................................................................................................................

## இலங்கையில் பிறந்த இந்திய நடிகர்கள் சிலர்..

1- எம்.ஜி.ஆர் (எம்.ஜி ராமச்சந்திரன்) (தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்.

2- சுஜாதா

3- ராதிகா (M R ராதாதாவின் மகள்)

4- நிரோஜா (M R ராதாதாவின் மகள்)

5- பூஜா

(இன்னும் பலர் இருக்கிறார்கள்)



## குரலால் குவலயத்தை வலம் வந்த அமரர் முல்லை மோகன் அவர்களுக்கு எம் இதய அஞ்சலி.

ஜெர்மனியில் வாழ்ந்த மூத்த அறிவிப்பாளர் , தொகுப்பாளர், ஊடகவியலாளர், ஆய்வாளர் எனத் தன் வாழ்நாட்களை தமிழுக்கும், தமிழ்சமூகத்திற்கும் அர்ப்பணித்த மனிதநேயமிக்க முல்லை மோகன் அண்ணா அவர்களின் எதிர்பாராத இழப்பு எம் சமூகத்திற்கு பேரிழப்பாகும்.

பெயர் - நாகராஜா மோகனதாஸ்
பிறப்பு - 22.04.1958 , கொக்குவில்
இறப்பு - 12.12.2024
தந்தை தாய் - திரு திருமதி நாகராஜா கமலாம்பிகை
வதிவிடம் - முல்லைத்தீவு
புலம்பெயர்வு - 1983 ,யேர்மனி
மனைவி - அமரர் பவளராணி
பிள்ளைகள் - கமல்ஆனந், ரஜீந்தர், சுரேந்தர், நிருபா
சேவை - ஊடகவியாளர், அறிவிப்பாளர், தொகுப்பாளர்,ஆய்வாளர் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்க ஊடகப் பேச்சாளர்.

பல பெரும் நிகழ்ச்சிகளை முன்னின்று ஒழுங்குப்படுத்தி தொகுத்து அளித்தவர். ஈழத்தில் இளவயதில் அறிவிப்புத் துறையை கையில் எடுத்தவர் புலம்பெயர்தேசங்களில் தன் இறுதி மூச்சு வரை 50 வருட காலம் தனக்கென ஒரு முத்திரை பதித்து அத்துறையில் நிமிர்ந்து நின்றவர்.TRT RADIO , ETR RADIO ,TRT TV , TTN TV, GTV போன்ற ஐரோப்பியஊடகங்களிலும்STS TAMIL, TAMIL MTV யேர்மனிய இணைய தொலைக்காட்சி ஊடகங்களிலும் தன் குரல் வளத்தால் உலகை வலம்வந்தவர்.

வாழும் போதே கலைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்களின் வாழ்க்கையை பதிவு செய்து ஆவணப்படுத்த வேண்டும் என்ற தூரநோக்குடன் செயற்பட்டவர்.வாழ்நாள் சாதனையாளர் விருது, இசைத்தமிழன் விருது, உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் விருது எனப் பல விருதுகளைப் பெற்றவர்.

கலைவிளக்கு வீடியோ சஞ்சிகையில் எசன் பாலா அவர்களும், பண்ணாகம். கொம் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும்,லண்டன் தமிழ் வானொலி, பாமுகதில் தொகுப்பாளர் ஜெயா நடேசன் அவர்களும் இவரை அழைத்து நேர்காணல் செய்தமை நாம் அறிந்த நேர்காணல்கள் கௌரவிப்புக்களாகும்.

இவரது ஆன்மா இவ் உலகை விட்டு சென்றாலும் என்றும் எம்முடன் புகழ் உடம்புடன் வாழ்ந்து கொண்டே இருப்பார்.அன்னாரின் ஆத்மாவிற்கு எம் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எம் ஆறுதல்களையும் பகிர்கின்றோம். தம் வாழ் நாட்களை எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி சமூகம் சார்ந்து சேவை மனப்பான்மையுடன் செயற்படுகின்ற அத்தனை உறவுகளுக்கு எம் மனம் நிறைந்த நன்றிகள் இத் தருணத்தில் தெரிவிக்கின்றோம்.

**-சாந்தினி துரையரங்கன் -**

## சிறந்த ஊடகவியலாளனை இழந்தோம்!..

நாற்பது வருடகால எனது நண்பர். சிறந்த ஊடகவியலாளர், எல்லோருடனும் அன்பாகப் பழகியவர். ஆயிரக்கணக்கான மேடைகளைக்கண்டவர். மேடைப்பேச்சாளர், பட்டிமன்றப் பேச்சாளர், அறிவிப்பாளர், விமர்சகர் என பன்முக ஆளுமை படைத்த அன்பர் முல்லை மோகனின் மறைவுச்செய்தி கேட்டு நிலைகுலைந்து நிற்கின்றேன். என்னைப்போல அவரின் பிரிவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் ஆயிரம்..ஆயிரம் நட்புக்களோடு எனது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமரர் முல்லை அவர்கள் பொன்விழாக் கண்ட அறிவிப்பாளராவர். 1975 ஆண்டுகளில் யாழ் மணிக்குரல் வானொலி அறிவிப்பாளராக அவரின் குரல் ஒலித்தது. அந்தக் குரலைக் கேட்டு மகிழ்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களில் நானும் ஒருவன்.

1977 பாராளுமன்றப் பொதுத் தேர்தல் பிரசாரம் மிகவும் சூடுபிடித்த வேளையில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தமிழரசுக்கட்சிக்காக பல மேடைகளில் இவரின் குரலைக் கேட்டு மகிழ்ந்தேன். பட்டிதொட்டி எல்லாம் இவரின் குரல் ஒலித்ததை நான் அறிவேன்.

1984ம் ஆண்டு முதன் முதல் யேர்மனி முல்கைம் நகரில் நடைபெற்ற நத்தார் விழாவில்தான் இவரோடு எனது முதலாவது உரையாடல் அமைந்தது. பின்பு நட்பு பெருகியது.

1985 - 1990 காலப்பகுதிகளில் நான்வாழும் டியூஸ்பேர்க் நகர விளையாட்டு வீரர்களுக்கும் அவர் வசித்த முல்கைம் நகர விளையாட்டு வீரர்களுக்குமிடையே வருடாவருடம் கிரிக்கட் போட்டி நடைபெற்ற வேளைகளில் நாம் இருவரும் விளையாடி ஒன்றுகூடி உண்டு குடித்து மகிழ்த ஞாபகம் இன்றும் நிழலாடுகின்றது. அது ஒரு பொற்காலம்தான்.

அன்று தொட்டு இற்றைவரை நூற்றுக்கு மேற்பட்ட விழாக்களில் பேசிக் கதைத்து நகைச்சுவைகளைப் பரிமாறி, அகமகிழ்த நிகழ்வுகள் என்று மறக்கமுடியவில்லை.யாருடனும் கடிந்து பேசமாட்டார். உண்மையை உரக்கச் சொல்லுபவர். அநீதிகளைத் தட்டிக் கேட்கக்கூடியவர். எல்லோருடனும் அன்பாகப் பேசுபவர். நட்பை வளர்த்துக் கொள்பவர். சிறந்த அறிவிப்பாள். பொன்விழா (50 வருடங்கள்) கண்ட ஐரோப்பிய அறிவிப்பாளர். அதுமட்டுமல்ல உலகத்தின் பல பிரபலங்களைப் பேட்டிகண்டு வானொலி தொலைக்காட்சிகளில் ஒலி, ஒளிபரப்பியவர். அன்னாரின் இழப்பைப் பேரிழப்பாகவே நான் கருதுகின்றேன். கண்ணீர் அஞ்சலிகள்!... ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி அவர் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி நிற்கின்றேன்...

**- ஆசிரியர் -**

# தாயகச் செய்திகள் சில...

20.11.24- நாடு முழுவதும் கடந்த 5 வருடங்களில் 96 அரச பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. தற்போது நாடு முழுவதும் 10.096 அரச பாடசாலைகள் உண்டு. இவற்றில் 396 தேசிய பாடசாலைகளாகும். மொத்தமாக 38.82.688 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். 1.81.219 பெண் ஆசிரியர்களும் 56.570 ஆண் ஆசிரியர்களும் கடமை புரிகிறார்கள்.

25.11.24- க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நடைபெற்று முடிந்துள்ளன.2.53.380 பாடசாலை மாணவர்களும் 79.795 தனிப்பட்ட மாணவர்களும் தோற்றினர். 2.312 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது.

26.11.24- இந்த வருடம் மட்டும் குற்றங்களோடு தொடர்புடைய 298 காவல்த்துறையினர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

27.11.24- இந்த ஆண்டு மட்டும் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் கைது. 66 படகுகள் பறிமுதல்.

28.11.24- 2023ல் 350, 2024ல் 694 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிப்பு. இதுவரை 6.000 பேர் அடையாளம் 3.500 பேர் சிகிச்சை பெறுகின்றனர்.

30.11.24- இந்தவருடம் 30.11.2024வரை 17.76.889 வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் நாட்டுக்கு வந்து போயுள்ளனர்.இதனால் நாட்டின் வருமானம் அதிகரித்துள்ளது.

07.12.24- இந்த வருடம் 10ம் மாதம்வரை நாட்டில் 1.084 தொழு நோயாளர்கள் அடையாளம். 2023ல் 1.500 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

10.12.24- இந்த வருடம் 10.12.2024வரை 46.385 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

15.12.24- சென்ற ஆண்டில்(2024) 3 லட்சம் இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்ந்திருக்கிறார்கள் (பெண்கள் 1,23.000 ஆண்கள் 1.77.000)

18.12.24- நாட்டில் வாகன விபத்துக்களால் தினமும் 8பேர்வரை இறப்பு.

20.12.24- வவுனியா மாவட்டத்தில் சென்றவருடம் தை தொடக்கம் ஐப்பசிவரை 45 பேர் மாரடைப்பால் இறந்திருக்கிறார்கள்.

21.12.24- முல்லைத்தீவு-முள்ளிவாய்க்கால் கடற்பகுதியில் மியன்மார் (பர்மா) நாட்டு அகதிகள் 115பேர் படகுகள் மூலம் அகதிகளாக வந்து சேர்ந்துள்ளனர்.

31.12.24- இந்த ஆண்டில்மட்டும் 12.000 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்தது.

01.01.25- வடமாகாணத்தில் 31.12.24 வரை 10பேர் எலிக்காய்ச்சலால் மரணம் 200 பேர்வரை அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

01.01.25- நாட்டில் வாகன விபத்துக்களால் தினமும் 8பேர்வரை இறப்பு. 2024ல் 2.243பேர் பலி. 22.967 விபத்துகளும் 6.500 கடுமையான விபத்துக்களும் இடம்பெற்றதாக பொலிஸ் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

02.01.25- சென்ற ஆண்டில் நாட்டுக்குள் அத்துமீறி மீன்படித்த குற்றத்தின்பேரில் 554 இந்திய மீனவர்களும் 72 மீன்பிடிப்படகுகளும் கைப்பற்றப்பட்டதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

03.01.25- பாதுகாப்பற்ற மின்சார வேலிகளால் சென்ற ஆண்டில் 50 யானைகள் உயிரிழந்திருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

04.01.25- நத்தார் தினத்தை முன்னிட்டு 389 சிறு குற்றம்புரிந்த கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

04.01.25- இலங்கையில் வருடாந்த குழந்தைகள் பிறப்பில் வீழ்ச்சி. இரண்டரை லட்சம் குறைவடைந்ததாக சுகாதரப்பகுதி அறிவித்தது.

05.01.25- 1.1.2024 தொடக்கம் 31.12.2024வரை நாடடிற்கு 20.53.465 சுற்றுலாப்பயணிகள் வந்திருப்பதாக அரசு குறிப்பிட்டுள்ளது.

## உலகச்செய்திகள் சில...

20.11.24- 1000 நாட்கள் கடந்த ரஷ்ஷியா - உக்ரைன் போரால் இரு தரப்பிலும் 12.000 பேர்வரை இறப்பு 10 லட்சம்பேர்வரை இடம்பெயர்வு, 10 லட்சம்பேர்வரை புலம்பெயர்வு 600 சிறுவர்கள் குழந்தைகள் பலி..

22.11.24- 10ம் 11ம் மாதங்களில் இஸ்ரேல் - பலஸ்தீன் மோதலில் 200 சிறுவர்கள், குழந்தைகள் பலி.

25.11.24- யேர்மனியில் தற்போது 46 மில்லியன் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். 2040ம் ஆண்டளவில் 42 மில்லியனாகக் குறைவடையும். இதனால் வருடாவருடம் 2.88.000 வெளிநாடுகளின் தொழிலாளர்கள் தேவைப்படுவார்கள் என தொழிற் திணைக்களம் அறிவித்துள்ளது.

30.11.24- 16வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் சமூகவலைத் தளங்களைப் 2025லிருந்து பாவிப்பதை அவுஸ்த்திரேலியா அரசு தடைவிதித்துள்ளது. பல நாடுகள் இதை வரவேற்றுள்ளன.

01.12.24- இந்தியாவில் தற்போது 10 கோடிபேர் நீரழிவுநோயினால் பாதிப்பு.

02.12.24- நைஜீரியாவில் படகு விபத்து 27 பேர் பலி 100 பேர் காணாமல் போயுள்ளனர்.

04.12.24- உலகியுள்ள சுமார் 800 கோடி சனத்தொகையில் 540 கோடி பேருக்கு இணையத்தள வசதிகள் உண்டு.

07.12.24- குடும்பத் தகராறு காரணமாக உலகில் நாளொன்றுக்கு 140 சிறுமிகள், பெண்கள் குடும்ப உறவுகளால் கொலை செய்யப்படுகிறார்கள்.

08.12.24- பில்லி சூனியம் மூடநம்பிக்கையால் ஹெட்டி நாட்டில் ஆயுதக் குழுக்களால் 110 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

09.12.24- புரட்சிப் படைகளின் தாக்குதலால் சிரியாவின் பெரும்பகுதி கட்டுப்பாட்டுக்குள் வந்தது. தலைநகர் டமஸ்கஸ் நகரும் வீழ்ந்தது. ஆட்சி கவிழ்ப்பு. ஜனாதிபதி பஷர் அல் அசாத்தும் குடும்பத்தவர்களும் தப்பிஓடி ரஷ்ஷியாவில் தஞ்சம்..1971 தொடக்கம் இற்றைவரை குடும்ப ஆட்சி நிலவியது 2011 தொடக்கம் உள்நாட்டுப் போரால் 1 மில்லியன் சிரியா மக்கள் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம்.

10.12.24- இஸ்ரேல் பலஸ்தீன் - காஸாப் போரால் 10.12.24வரை 44.758 பேர் பலி. 2023.10.07 தொடங்கிய இந்தப் போரால் 1.06.334 பேர் காயம்.

20.12.24- கியூபாமீது கடந்த 60 வருடங்களாக பொருளாதாரத்தடை விதித்த அமெரிக்காமீது எதிர்த்து கியூப மக்கள் 7லட்சம்பேர் ஒன்றுகூடி ஆர்பாட்டம் நடாத்தினார்கள்.

22.12.24- மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்கநாடுகளில் பசி, பட்டினியால் சுமார் 40 மில்லியன் மக்கள் பாதிப்பு ஐ.நா.சபை அறிக்கை தெரிவித்தது.

27.12.24- இந்திய முன்னாள் பிரதமரும் (2004 - 2014) பொருளாதார வல்லுனருமான மன்மோகன் சிங் தனது 92வது வயதில் காலமானார். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தனது 100வது வயதில் காலமானார். 39வது ஜனாதிபதி (1977 - 1981)

28.12.24- நைஜீரியாவில் கிறிஸ்மஸ் பரிசுப்பொருட்கள் இலவசமாக வழங்கும் வைபவத்தின் சனநெரிச்சலில் சிக்குண்டு 87 பேர் பலியானார்கள்.

29.12.24- தென்கொரியா விமான விபத்தில் 179பேர் பலியானார்கள்.

31.12.24- 2024ல் உலகில் இடம்பெற்ற 10 பேரிடர்களில் 2.000 பேர்வரை பலியாகியிருக்கிறார்கள் ஐ.நா.சபை அறிக்கை தெரிவித்தது.

# யேர்மனிய கார் (மகிழூர்ந்து) தகவல்கள் சில...

 

01.01.1886- யேர்மனியில் கார் (மகிழூர்ந்து) அறிமுகப்படுத்தப்பட்டது.

08.09.1909- மணித்தியாலத்துக்கு 64 கி.மீ வேகத்தில் செல்லக்கூடிய வாகனம் தயாரிக்கப்பட்டது.

11.08.1927- யேர்மனியில் முதலாவது பெற்றோல் நிரப்பு நிலையம் (Tankstelle) கம்பேர்க் நகரில் திறக்கப்பட்டது.

06.08.1932- யேர்மனி கேளின் (Köln) நகரில் அதிவேகச்சாலை (Autobahn) முதன் முதல் திறக்கப்பட்டது.

01.12.1951- யேர்மனியில் வாகனங்களைப் பரிசோதனை செய்து உறுதிப்படுத்துதல் முறை (Tüv) சட்டம் அமுலுக்கு வந்தது.

21.01.1957- யேர்மனியில் பொலிசாரால் வீதிக்கட்டுப்பாட்டுக் கமரா முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

01.07.1958- பெண்கள் கார் ஓட்டுவதற்கான அனுமதியை யேர்மனிய அரசு முதன் முதலாக வழங்கியது.

01.01.2008- யேர்மனியில் வாகனங்களின் புகையால் ஏற்படும் சுற்றாடலை மாசுபடுத்துவதை தடைசெய்யும் கட்டுப்பாட்டு முறை (Umwelt Zonen) சட்டத்திற்கு வந்தது.

## இன்னும்சில தகவல்கள்...

01.01.1921- உலகின் முதலாவது (Drive in Restaurent) அதாவது காரை ஓட்டிக்கொண்டிருநதவாறே உணவைப் பெற்றுக்கொள்ளும் முறை அமெரிக்காவின் Dallas / Taxas மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

01.01.1933- வாகனங்களை ஓட்டுபவர்கள் ஓய்வெடுக்கும் இடங்களில் (Car Park) நிறுத்திவிட்டு திரைப்படம் பார்க்கும் திரையரங்கு முறை (Auto Kino) அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

# டென்மார்ககில் வசிக்கும் எழுத்தாளர்... திரு வீ. ஜீவகுமாரனின் படைப்புலகம்

தொகுப்பு : முனைவர் க.பன்னீர்செல்வம்
பதிப்பு : சென்னை பாரதி பதிப்பகம்
திரு வீ. ஜீவகுமாரனின் படைப்புலகம் ஆய்வுக்கட்டுரைகள்
இந்நூல் திரு.ஜீவகுமாரனிடமிருந்து என் கரம் கிடைக்கப்பெற்றேன். மிக மகிழ்ந்தேன்.
டென்மார்க் கவிஞர், எழுத்தாளர் திரு ஜீவகுமரன் அவர்கள் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவையாவன..

- யாவும் கற்பனை அல்ல
- மக்கள் மக்களால் மக்களுக்காக
- சங்கானைச்சண்டியன்
- ஜீவகுமாரன் கதைகள்
- ஜேர்மனிய கரப்பான் பூச்சிகள்
- கடவுச் சீட்டு
- நிர்வாண மனிதர்கள்
- குதிரை வாகனம்
- கடைக்குட்டியன்
- வைர மரங்கள்
- புலம்பெயர்சிறுகதைகள(ஆய்வரங்கம்)
- இப்படிக்கு அன்புள்ள அம்மா
- முகங்கள்
- மெல்ல தமிழ் இனித் துளிர்க்கும்
- தமிழ் டெனிஸ் ஆங்கில அகராதி
- மூத்த எழுத்தாளர்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள், பண்டிதர்கள் என முப்பதுபேர்

ஜீவகுமாரனின் படைப்புகளை ஆய்வு செய்துள்ளனர்.(குதிரைவாகனம் ) ஆய்வுக் கட்டுரையும் சேர்க்கப்பட்டிருந்தமை கிடைத்த மாபெரும் கௌரவமாகும்.
திரு ஜீவகுமாரனின் படைப்புகள் அத்தனையும் முத்துக்கள்.ஒவ்வொரு படைப்பும் அதைவிட உச்சம் என்று கூறும்வகையில் அவரது படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
திரு ஜீவகுமாரனிடமிருந்து தொடர்ந்த படைப்புகளை எதிர்பார்த்தபடி வாழ்த்துகளை தெரிவித்து மகிழ்கிறேன்.

**கலைவாணி. ஏகானந்தராஜா - யேர்மனி**
**( எழுத்தாளர், சங்கீத ஆசிரியர் )**

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212060620 Fax:-0774868085 FarmNo:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 திகதி ___/___/20___

வை.சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,
ஜேர்மனி.

நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. தங்கள் மண் சஞ்சிகை குழுமத்தினருக்கு ஊடாக ஏற்பாடு செய்து வழங்கிய480-00 யூறோ 143176.95 ரூபா நிதியினை பயன்படுத்தி எமது துணுக்காய்,பாண்டியன்குளம் பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர்உணவு பொதி வழங்கி வைத்தோம் என்பதை தங்களிற்கு தெரிவித்துக்கொள்வதோடு இச்செயற்திட்டத்தை செயற்படுத்த நிதி அனுசரணை நல்குவதற்கு ஏற்பாடு செய்து வழங்கிய தங்களிற்கும் தங்கள் குழுமத்தினருக்கும் எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களது சேவை எம்மவர் மத்தியில் மேலும் கிடைத்த வண்ணமுள்ளமையினையிட்டு மிக்க மகிழ்வடைவதோடு பாராட்டி வாழ்த்தி நிற்கிறது ஒளிரும்வாழ்வு குடும்பம்.

நன்றி

..........................

தலைவர்.
ஒளிரும்வாழ்வு அமைப்பு,
துணுக்காய்.

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

# Good Shepherd Child Development center,

## Mullai Road, Mankulam

## Srilanka.

E-mail – mankulamcdc@gmail.com

Tel. No. – 0212060077/+94775924582

Date: 07.12.2024

[illegible]

[illegible]

[illegible] 12.11.2024 [illegible] 121160.82 (400 [illegible]

[illegible]

[illegible]

[illegible]




[illegible]

ஒளிரும் வாழ்வு-புதுக்குடியிருப்பு பிரதேசம்
**Olirum Vaalvu- Puthukudiyiruppu Division**

உடையாயர் கட்டு
கிழக்கு, உடையார் கட்டு
புதுக்குடியிருப்பு

Udaiyarkaddu east
Udaiyarkaddu
Puthukudiyiruppu

**Reg No:- MU/PKI/DS/VSSO/25**


Date :-

**தலைவர்**
திரு.இ.அம்பிகைபாலன்
BA.Hon, Dip in coun
தொ.பே 0778491233

**செயலாளர்**
திரு.கு.அகிலன்
சமாதான நீதவான்
தொ.பே 0772049344

**பொருளாளர்**
திரு. ச.தவசிங்கம்
தொ.பே 0772890659

**உப தலைவர்**
திரு. சி.உதயகுமார்

**உப செயலாளர்**
திருமதி வ.செல்வராணி

ஆசிரியர்,

மண் சஞ்சிகை,

ஜெர்மனி.

**இடர் கால நிவாரண உதவி திட்டத்திற்கான நன்றி கூறல்**

மேற்படி விடயம் தொடர்பாக எமது வேண்டுகோளுக்கு அமைவாக வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகளினை வழங்கி வைப்பதற்காக தாங்கள் அனுப்பிய ரூபாய் ஒரு லட்சம் கிடைக்கப்பெற்றது நிதியினை கொண்டு ரூபாய் 3000 பெறுமதியிலான உலர் உணவு பொதிகள் இன்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டது என்பதை தங்களுக்கு மகிழ்வுடன் அறியத் தருகின்றோம் நாங்கள் அல்லல்படுகின்ற போதெல்லாம் தாங்களும் தங்களது வாசகர்களும் பல்வேறு வகையிலும் உதவிகளை வழங்கி தங்களது அன்பு கரங்களை நம்மோடு இணைத்துக் கொண்டமைக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இன்னும் பல குடும்பங்கள் உதவி தேவைப்படுபவர்களாக இருக்கின்றார்கள் அவர்களுக்கும் தங்களால் இயன்ற உதவியினை வழங்கி உதவுமாறு தயவாக கேட்டுக் கொள்கின்றோம்

நன்றி

இப்படிக்கு

என்றும் மக்கள் சேவையில்

R.Aw —
.............................

இ.அம்பிகைபாலன்

தலைவர்

ஒளிரும்வாழ்வு - புதுக்குடியிருப்பு

R.Ambikaipalan
President
Olirum vaalvu
Puthukkudiyiruppu
Reg.No Mu/PKI/DS/VSSO/25


E-mail :- olirumvaalvu@gmail.com Phone No :- 0094778491233
Web:- www.olirumvaalvu.org Face book :- olirumvaalvu puthukudiyiruppu

# சிறீலங்கா மழை, வெள்ள அனர்த்த நிதி உதவிகள் - 2024

நாட்டில் 2024 நவம்பர்,டிசம்பர் மாதங்களில் பெரு வெள்ளம் ஏற்பட்டது. இந்தப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்படி நாம் வேண்டுகோள் விடுத்தோம். எமது கோரிக்கையை ஏற்று மனிதநேய உதவிபுரிந்த அத்தனை நல்லஉள்ளங்களுக்கும் பெரு நன்றிகள்...

நிதிஉதவி வழங்கியவர்கள்..

- 480-00 Euro திருமதி பிரிந்தாவனி கலைவாணி- குடும்பம்-Weeze
- 100-00 " திருமதி கலைவாணி ஏகானந்தராசா -Weeze

..........................................................................................

- 300-00 " திரு சி வேலும்மயிலும் குடும்பம்-Westendorf (München)
- 350-00 " திரு ஐ இரகுநாதன் குடும்பம் - Mülheim
- 200-00 " திரு ஜெயம் தங்கராசா குடும்பம் - Holland

..........................................................................................

- 150-00 " செல்வி ஸ்ரெவ்வானி மகாலிங்கம் - Oberhausen
- 50-00 " திரு பொ மகாலிங்கம் குடும்பம் - Oberhausen

..........................................................................................

- 118-04 " திரு பன்னீர்ச்செல்வம் குடும்பம் - London
- 100-00 " திருமதி இராஜேஸ்வரி சிவராசா குடும்பம் - Duisburg
- 100-00 " திருமதி ரோகினி இரத்தினசிங்கம் குடும்பம் - Duisburg
- 100-00 " திரு சீ பிரபாகரன்குடும்பம் - Oberhausan
- 100-00 " திருமதி மேனகா நேசராசா குடும்பம் - Oberhausen
- 100-00 " திருமதி ராணி சம்பந்தர் குடும்பம் - Everwinkel
- 100-00 " திரு சு விக்னேஸ்வரன் குடும்பம் - Essen
- 100-00 " திரு இரா சம்பந்தர் குடும்பம் - Ratingen
- 100-00 " திரு பொன்னையா பகீரதன் -
- 100-00 " திருமதி சந்திரா அன்பழகன் குடும்பம் - Denmark
- 75-00 " திருமதி சுபேந்தி வசந்தராசா குடும்பம் - Duisburg
- 50-00 " திரு சத்தியகுமார் குடும்பம் - Krefeld
- 50-00 " திரு ப.பசுபதிராசா குடும்பம் - Wupertal
- 50-00 " திரு அற்புதராசா குடும்பம் - Soest
- 50-00 " திருமதி கலா விஜயானந்தன் குடும்பம் - London
- 30-00 " திரு அ வரதராசன் குடும்பம் - Düsseldorf
- 25-00 " செல்வன் நகுல் துரையரங்கன் குடும்பம் - Essen
- 21-96 " ஒரு நலன்விரும்பி.

..........................................................................................

3.100-00 Euro மொத்த வரவுகள்..

..........................................................................................

அனுப்பியது:-

1- ”ஹரிதாஸ் வாழ்வுதயம்” - மன்னார்
( ரூபா 1.49.601-80 ) - 500-00 EURO
2- ”ஒளிரும் வாழ்வகம்” - துணுக்காய்
( ரூபா 1.43.176-95 ) - 480-00 ”
3- ”ஒளிரும் வாழ்வகம்” -புதுக்குடியிருப்பு
( ரூபா 1.00.000-00 ) - 337-51 ”
4- ”வாசம் உதவும் அமைப்பு” -மட்டக்களப்பு
( ரூபா 1.00.000-00 ) - 337-30 ”
5- ”அறவழி நிலையம் ” - சாவகச்சேரி
( ரூபா 1.00.000-00 ) - 335-62 ”

..............................................................................................................................

( 5.92.778-75 ரூபா ) - 1.990-43 Euro

..............................................................................................................................

அனுப்பியது.. தைப்பொங்கல் நிதி உதவி...
1- வேவண்டன் தோட்டம் - மலையகம்
இறம்பொட - நுவரெலியா ( 50.000-00 ரூபா ) - 172-10
2- பிறவுன்ஸ்வீக் தோட்டம் மலையகம்
மஸ்கேலியா ( 50.000-00 ரூபா ) - 168-41
3- ஒளிரும் வாழ்வகம்
மல்லாவி - துணுக்காய் ( 50.000-00 ரூபா ) - 168-42
4- அறவழி நிலையம்
சாவகச்சேரி ( 50.000-00 ரூபா ) - 172-51
5- அமுதசுரபி அறக்கட்டளை
வவுனியா ( 50.000-00 ரூபா ) - 172-10
6- வாசம் உதவும் அமைப்பு
மட்டக்களப்பு ( 50.000-00 ரூபா ) - 172-51

..............................................................................................................................

3.00.000-00 ரூபா - 1026-05

..............................................................................................................................

மொத்த வரவு - - 3.100-00 யூரோ
செலவுகள் -
மழைவெள்ள நிவாரணத்திற்கு அனுப்பியது -1.990-43
தைப்பொங்கலுக்கு அனுப்பியது -1.026-05
..................

மொத்தச் செலவு 3.016-48 - 3.016-48 யூரோ
.....................

மிகுதி கையிருப்பு 31.12.2024 + 83-52 யூரோ
மிகுதிப்பணம்ஆதரவற்றோர் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.
ஆசிரியர் - மண் சஞ்சிகை - யேர்மனி 15.01.2025 (பக்கம் 74)

## மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா
(பி.தி 03.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

..........................................................................................................................................

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி(பி.தி 02.04.2013)

..........................................................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. -திலக்சிகா கோடீஸ்வரன்(பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

..........................................................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. -கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

..........................................................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி ”அருளகம்” - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

..........................................................................................................................................

6- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

.......................................................................................................................................

7- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

.......................................................................................................................................

8- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

---------------------------------------------------------------------------------------------------------------.

- பொறுப்பெடுத்தவர்கள் 8 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 12 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

---------------------------------------------------------------------------------------------------------------



வை.சிவராஜா,

பிரதம ஆசிரியர்,

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,

ஜேர்மனி.

நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. தங்கள் மண் சஞ்சிகை குழுமத்தினருக்கு ஊடாக ஏற்பாடு செய்து வழங்கிய (யேர்மனி பெண்கள் அமைப்பு ) ~~100-00 யூரோ (30000)~~ நிதியினை பயன்படுத்தி எமது மாற்றுத்திறனாளி பிள்ளைகளுக்கான சித்திரவருடப்பிறப்பிறப்புக்கு புத்தாடை வழங்கி வைத்தோம் இவ் நிதி உதவியினை ஏற்பாடு செய்து வழங்கிய தங்களிற்கும் தங்கள் குழுமத்தினருக்கும் எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களது சேவை எம்மவர் மத்தியில் மேலும் கிடைத்தவண்ணமுள்ளமையினையிட்டு மிக்க மகிழ்வடைவதோடு பாராட்டி வாழ்த்தி நிற்கிறது ஒளிரும்வாழ்வு குடும்பம்.

நன்றி

யூரோ – 102.72
Rs - 30,000

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துனுக்காய்

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-11-2024 + 766-57

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா ரஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு-
08- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essenen +480-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)-------------
+ 1.060-00+1.060-00

---------------
+ 1.826-57

அன்பளிப்புகள்...
10. செல்வன் பானுஸ்கந்தா புவனேந்திரன் -Oberhausen + 200-00
(பிறந்தநாள் அன்பளிப்பு )

09. புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு
சர்வோதய நற்பணி மன்றம் - Germany + 300-00 + 300-00
-----------------
+ 2.326-57
71ம் பக்கம் மழைவெள்ள கணக்கு மீதி + 83-52
-----------------
+ 2.410-09

திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா ஏற்கனவே மாதாந்தம் கணக்கு வைக்கப்பட்டது 01.01.2024 - 31.12.2024 (12 x 40 Euro) - 480-00
------------------
+ 1.930-09

முற்பக்கப்படி + 1.930-09

**அனுப்பியது...**

| | ரூபா | | யூரோ |
|---|---|---|---|
| 1) ”சிறீ சண்முகா பெண்கள் இல்லம் திருகோணமலை (சாந்தினி-Essen) | 1.43928-3 | - | 480-00 |
| 2) ”அமுதசுரபி”கல்வி,சமூக அமைப்பு வவுனியா (புங்குடுதீவு ஒன்றியம்) | 88.598-25 | - | 300-00 |
| 3) ”நல்லாயன்” சிறுவர் இல்லம் மாங்குளம் (மேரி + மங்கை) | 1.21.160-82 | - | 400-00 |
| 4) ”ஒளிரும் வாழ்வகம்” புதுக்குடியிருப்பு பு.பானுஸ்கந்தா - பிறந்தநாள் | 58.452-62 | - | 200-00 |

...............

- 1.380-00 - 1.380-00

------------------

+ 550-09

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.11.2024 - 30.11.2024 - 20-49
01.12.2024 - 31.12.2024 - 30-99........................................... - 51-48

-----------------------

31.12.2024 மீதி கையிருப்பு + 498-61

-----------------

**35வது ஆண்டு நிறைவு விழா 05.04.2025.....**

**மண் சஞ்சிகையின் 35வது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் 05.04.2025 அன்று டியூஸ்பேர்க் நகரில் சிறப்பாக நடைடிபறவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். பலவித நிகழ்வுகள் உங்களை மகிழ்விக்கக் காத்திருக்கின்றன...**

**கூடுவோம்!...கண்டுகளிப்போம்!...கூடிமகிழ்வோம் !...**

ஒளிரும் வாழ்வு-புதுக்குடியிருப்பு பிரதேசம்
**Olirum Vaalvu- Puthukudiyiruppu Division**

உடையாயர் கட்டு
கிழக்கு, உடையார் கட்டு
புதுக்குடியிருப்பு

Udaiyarkaddu east
Udaiyarkaddu
Puthukudiyiruppu

**Reg No:- MU/PKI/DS/VSSO/25**

6-11-2024

**திருமதி கிரிஸ்ரி அமலதாஸ்**

**லண்டன்**

**மண்சஞ்சிகை**

**ஜேர்மனி**

**ஊடாக….**

அன்புடையீர்

**ஞானக்குழந்தைகள் பகல்பராமரிப்பு நிலைய பிள்ளைகளுக்கான (விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளுக்கானது) உதவிக்கான நன்றி கூறல்**

மேற்படி விடயம் தொடர்பாக 2016ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒளிரும் வாழ்வு புதுக்குடியிருப்பு அமைப்பானது மாற்றுத்திறனாளிகளுக்காக மட்டுமன்றி பெண்தலைமைக குடும்பங்கள், முதாளர்கள், மாணவர்கள் என அனைவருக்காகவும் பல செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது.

எமது அமைப்பானது நிரந்தரமான காணி கட்டிடங்களுடன் கொடி கீதத்துடன் இயங்கிவருதுடன் பின்வரும் செயற்திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது.

- ஞானக்குழந்தைகள் பகல்பராமரிப்பு நிலையம்
- செயற்கை அவயவங்கள் திருத்தகம்
- தெய்வக்குழந்தைகள் செயற்திட்டம்
- அறிவுச் சோலை கல்விப்பிரிவு
- அமுதசுரபி உலர் உணவு மற்றும் அன்னதான திட்டங்கள்
- வாழ்வாதாரத் திட்டங்கள்
- மதி ஒளி அரைக்கும் ஆலை
- தையல் நிலையம்
- பழச்சாறு உற்பத்தி விற்பனை நிலையம்

இச் செயற்திட்டங்களில் ஞானக்குழந்தைகள் பகல் பராமரிப்பு நிலையமானது மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கான ஒரேயொரு விசேட பாடசாலையாக எமது பிரதேசத்தில் இயங்கிவருகின்றது.

ஞானக்குழந்தைகள் பகல்பராமரிப்பு நிலையத்தின் ஊடாக 30 மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கு செயற்திறன் கல்வி போதிக்கப்படுகின்றது.

**E-mail :- olirumvaalvu@gmail.com** **Phone No:- 0094778491233**
**Web:- www.olirumvaalvu.org Twitter :- Olirumvaalvu**
**Face book :- olirumvaalvu puthukudiyiruppu**

# ஒளிரும் வாழ்வு-புதுக்குடியிருப்பு பிரதேசம்
# Olirum Vaalvu- Puthukudiyiruppu Division

உடையாயர் கட்டு
கிழக்கு, உடையார் கட்டு
புதுக்குடியிருப்பு

Udaiyarkaddu east
Udaiyarkaddu
Puthukudiyiruppu

Reg No:- MU/PKI/DS/VSSO/25

6-11-2024

நிதிப் பற்றாக்குறை காரணமாக தற்போது மாதம் ஒன்றிற்கு பன்னிரெண்டு நாட்கள் மட்டுமே எமது பாடசாலை இயங்கிவருகின்றது.

இதற்காக

- நான்கு ஆசிரியர்கள் 42000.00
- ஒரு பேச்சு பயிற்சி ஆசிரியர் 20000.00
- இரண்டு சமையலாளர் 12000.00
- நாளாந்தம் வாகன வாடகை 144000.00
- உணவு மற்றும் சிற்றுண்டி 120000.00
- கற்றல் உபகரணங்கள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் 10000.00

என மாதாந்தம் **மூன்று இலட்சத்து நாற்பத்து எட்டாயிரம் ரூபா** வரை செலவாகி வாருகின்றது

தற்பொழுது விசுமடு தொடக்கம் புதுக்குடியிருப்புவரை ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று பிள்ளைகளை ஏற்றி வந்து திரும்பவும் வீடுகளில் கொண்டு சேர்க்கின்றோம்.

தற்போது இவர்களை உடல் உள ரீதியாக வலுப்படுத்தும் வகையிலான மொழிப் பயிற்சி, தொழிற்பயிற்சிகள் மற்றும் வாழ்க்கைத் திறன் தேர்ச்சி பயிற்சிகள் என்பன வழங்கப்படுகின்றன.

இச் செலவினங்களை தேசங்கள் கடந்தபோதும் எம்மீது நேசங் கொண்ட உறவுகளின் வீடுகளில் இடம்பெறும் மங்கள நிகழ்வுகள் மற்றும் நீத்தார் நிகழ்வுகளின் ஒருபகுதியாக வழங்கப்பட்டுவரும் உதவிகளினாலேயே ஈடு செய்யப்படுகின்றது.

அந்தவகையில் **தங்களது குடும்ப உறுப்பினரான சிவசுப்பிரமணியம் குணசீலன் அவர்களது இறப்புதுயரிலும் அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டி தாங்கள் எமது ஞானக்குழந்தைகளின் கல்விச் செயற்பாடுகளுக்காக தாங்கள் மண் சஞ்சிகையின் ஊடக ஆனுப்பிய 44870.40 ரூபா நிதி கிடைக்கப்பெற்றது என்பதை அறியத்தருவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்தித்து நிற்கின்றோம்.**

நன்றி

இ.அம்பிகைபாலன்

B.A in psychology, Dip in Counselling

தலைவர்

ஒளிரும்வாழ்வு-புதுக்குடியிருப்பு

E-mail :- olirumvaalvu@gmail.com Phone No:- 0094778491233
Web:- www.olirumvaalvu.org Twitter :- Olirumvaalvu
Face book :- olirumvaalvu puthukudiyiruppu

# Caritas -Valvuthayam
## Diocese of Mannar

(Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka Incorporated by Act of Parliament No.17 of 1983)

மதிப்பிற்குரிய திரு.சிவராஜா
பதிப்பாசிரியர்
மண் சஞ்சிகை
ஜேர்மன்

**மன்னார் மாவட்டத்தில் வெள்ள நிவாரண உதவிகளை வழங்கி உதவுமாறு பணிவான வேண்டுகோள்.**

தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் குறித்து உங்களுக்கு தெரிவிக்கின்றேன்.
மன்னார் மாவட்டத்தில் பெய்த கடுமையான மழையின் காரணமாக கரையோரப்பகுதிகள் மற்றும் அதனை அண்டிய அயல் கிராமங்கள் மழை மற்றும் கடல் நீரால் வெள்ளத்தில் மூழ்கின. வெள்ளம் புகுந்த கிராமங்களிலிருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு, தற்காலிகமாக நிறுவப்பட்ட பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டனர். மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் படி மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலகத்தையும் உள்ளடக்கிய மொத்தமாக 19774 குடும்பங்கள் ( 68080 உறுப்பினர்கள்) இதில் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர் தாழ்வான நிலப்பகுதி மற்றும் குடியேற்ற கிராமங்களில் வெள்ளம் அதிகளவில் இருந்தது. எனவே இந்த கிராமங்களில் வீட்டில் உள்ள வீட்டு அத்தியாவசிய சொத்துக்களுக்கு சேதம் அதிகமாக ஏற்பட்டுள்ளது.

**வெள்ளம் ஏற்படுத்திய பாதிப்பு**

1. பரவலான இடப்பெயர்வு மற்றும் நீரில் மூழ்கிய வீடுகள்.
2. வீடுகளுக்கு சேதம் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அழிந்தமை.
3. மீன்பிடி படகுகள் மற்றும் வலைகள் அழிப்பு, வாழ்வாதாரம் முடங்கப்பட்டமை.

இத்தாக்கத்தினால் எமது கடந்தகால அனுபவங்களை பொறுத்த மட்டில் டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களினால் பரவும் நோய்கள் எமது மக்களிற்கு பல துன்பத்தை அதிகப்படுத்தியுள்ளது. மேலும் மக்களிற்கு இது பெரும் சவால்களை கொண்டுவந்த வண்ணமே உள்ளது. பல குடும்பங்கள் இதனால் உடல் மற்றும் உளத்தாக்கத்தின் சுமையை எதிர் நோக்குகின்றனர். குறிப்பாக ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் மன அழுத்தத்தின் அபாயத்தில் குழந்தைகள் காணப்படுகின்றனர்.
பாதிக்கப்பட்ட பகுதிகளில் நான் மேற்கொண்ட பயணங்களில் நாளும் மக்கள் படும் பல துன்பங்களை கண்டுள்ளோம். கரித்தாஸ் மன்னார் ஸ்தாபனம் உட்பட அரசாங்கமும் ஏனைய தொண்டு பணியாற்றும் உள்ளூர் மட்ட அமைப்புகளும் தங்களால் ஓரளவிற்கு இயன்ற சில நிவாரணங்களை மட்டுமே வழங்குகின்றனர் எனினும் மருத்துவ தேவை அத்தியாவசிய தேவையாக காணப்படுகின்றன. எனவே இத்தேவையிலுள்ள மக்களிற்கு உதவி வழங்குவதற்கு தங்களது தாராள உதவியினை அவசரமாக கேட்டுக்கொள்கின்றோம்.

**அவசரம் தேவையிலுள்ள உதவிகள்**

1. தொற்று நீக்கி மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள்.
2. நோய் பரவாமல் தடுக்கும் மருத்துவப் பொருட்கள்.

இந்த உதவியின் மூலம் மக்கள் தொற்று நோயிலிருந்து விடுபடுவதோடு குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டி எழுப்ப முடியும்.

ஒவ்வொருவருடைய பங்களிப்பும் எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அர்த்தமுள்ள மாற்றத்தினை ஏற்படுத்தும். பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சார்பாக உங்கள் இரக்கத்தையும் உங்களது தாராள பெருந்தன்மையையும் நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். பலவற்றினை இழந்தவர்களிற்கு நம்பிக்கையையும் கண்ணியத்தினையும் மீட்டு எடுக்கலாம் என்பது எனது நம்பிக்கை உங்கள் ஆதரவிற்கு எனது நன்றிகள்.

இறைபணியில்

அருட்பணி.க.அருள்ராஜ் குரூஸ்
இயக்குனர்
கரித்தாஸ்
வாழ்வுதயம் - மன்னார்

CARITAS - VALVUTHAYAM
REV.FR.G.ARULRAJ CROOS
Director
No.180, Main Street, Mannar, Sri Lanka

Caritas Valvuthayam, No.180, Main Street, Mannar.
Telephone: 023-22 22 140
e-mail: info.valvum@gmail.com website: https://www.caritasvalvuthayam.com

# 2024ம் ஆண்டில் 44 லட்சம் (43.90.941-24) தாயகத்துக்கான நன்கொடை!..

மண் சஞ்சிகை தாயகத்துக்கான நன்கொடைகளைப் பல ஆண்டுகளாகச் செய்துவருவதைத் தாங்கள் அறிவீர்கள்...அதாவது வாசகர்கள், எழுத்தாளர்கள், நலன்விரும்பிகள், மனிதநேயவாதிகள், நண்பர்கள் மற்றும் உறவுகள் மனமுவந்து அளித்த நன்கொடையாகச் சென்ற வருடம் (2024) மட்டும் 43லட்சத்து 90 ஆயிரத்து 941 சதம் 24ஐ தாயகத்தின் பல இடங்களுக்கும் அனுப்பி வைத்தோம். மனிதம் காக்க உதவிபுரிந்துவரும் அத்தனை நல்லுள்ளங்களையும் வணங்கிப் பாராட்டி நன்றிகூறுகின்றோம். தாயகத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பிய விபரங்களைக் கீழே காணலாம்..

| | | ரூபா | யூரோ |
|---|---|---|---|
| A- வவுனியா மாவட்டம்:- | | | |
| | (1) அருளகம் | - 1.54.559-4 | - 480-00 |
| | (2) அன்பகம் | - 3.92.178-40 | - 1200-00 |
| | (3) அட்சயம் | - 1.38.598-25 | - 472-10 |
| B- மன்னார் மாவட்டம்:- | | | |
| | (1) சாந்தோர் முதியோர் இல்லம் | - 44.850-45 | - 150-00 |
| | (2) செபமாலை இல்லம் | - 3.23.636-55 | - 1.037-50 |
| | (3) ஹரிதாஸ் வாழ்வகம், | - 1.49.601-80 | - 500-00 |
| C- முல்லைத்தீவு மாவட்டம்:- | | | |
| | (1) நல்லாயன் சிறுவர்-மாங்குளம் | - 8.17.329-61 | - 2610-00 |
| | (2) ஒளிரும்வாழ்வுபுதுக்குடியிருப்பு | - 5.67.512.67 | - 1.839-24 |
| | (3) ஒளிரும்வாழ்வு - துணுக்காய் | - 9.85.018-61 | - 3.151-15 |
| D- யாழ்ப்பாண் மாவட்டம்:- | | | |
| | (1) அறவழி நிலையம்-சாவகச்சேரி | - 150.000-00 | - 508-13 |
| E- திருகோணமலை மாவட்டம்:- | | | |
| | (1) சிறீ சண்முகா மகளிர்இல்லம் | - 1.43.928-23 | - 480-00 |
| F- மட்டக்களப்பு மாவட்டம்:- | | | |
| | (1) திருஞானசம்பந்தர் குருகுலம் | - 1.49.371-42 | - 480-00 |
| | (2) வாசம் உதவும் கரம்அமைப்பு | - 1.50.000-00 | - 509-81 |
| G- நுவரெலியா மாவட்டம்:- | | | |
| | (1) பிறவுண்ஸ் தோட்டம் | - 50.000.00 | - 168-41 |
| | (2) வேவண்ட் தோட்டம் | - 1.74.355-77 | - 572-10 |
| | மொத்தம் | - 43.90.941-24 | - 14.158-44 |

(நாற்பத்து மூன்று லட்சத்து தொண்ணூறாயிரத்து தொழாயிரத்தி நாற்பத்தொன்று சதம் இருபத்தி நான்கு)

- ஆசிரியர் -

**"மண்"கல்வி,கலை,இலக்கிய,சமூக சஞ்சிகை-யேர்மனி**

**( ஆரம்பம் - 1990 )**

"ERDE" e.V. Stiftung &Tamilisches Magazin - Deutschland

"MANN" (Earth) Foundation & Tamil Magazine - Germany

AmWindhövel-18a, 47249-Duisburg

Tel 49 203 8073898 , 49 15254799233 Emai v.sivarajah @ arcor.de


---

## Mann (ERDE) Magazine 35 Jahr Jubiläum - 2025

## மண் சஞ்சிகையின் 35வது ஆண்டு நிறைவுவிழா – 2025

(1990 - 2025)

யேர்மனியில் வெளிவந்துகொண்டிருக்கும் „மண்" கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையின் 35வது ஆண்டு நிறைவுவிழா டியூஸ்பேர்க் நகரில் சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

காலம்:- 05.04.2025 சனிக்கிழமை - பகல் 14-30 மணி

இடம்:- Clauberg Halle Kampstrass-23 47166-Duisburg-Hamborn

### நிகழ்வுகள்

- மழலைகள் நிகழ்வுகள் - இளையோர் நிகழ்வுகள்
- மாணவர் நிகழ்வுகள் - வயலின், வீணை நிகழ்வுகள்
- கிராமிய நடனங்கள் - பரதநாட்டியங்கள்
- ஆடல் பாடல் நிகழ்வுகள் - மேலத்தேச நடனங்கள்
- கவியரங்கம் - பட்டிமன்றம்
- சொற்பொழிவுகள் - சிறப்புரைகள்
- எழுத்தாளர்கள் கௌரவிப்பு - ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு
- கலைஞர்கள் கௌரவிப்பு - சமூகசெயற்பாட்டாளர்கள் கௌரவிப்பு
- மனிதநேயச் செயற்பாட்டாளர்கள் கௌரவிப்பு - இன்னும் பல நிகழ்வுகள்

மாணவமணிகளே!..வாசகர்களே!..எழுத்தாளர்களே!..கலைஞர்களே!..நண்பர்களே!.

நலன்விரும்பிகளே!..மனிதநேயச் செயற்பாட்டாளர்களே அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்....

பிரதம ஆசிரியர் – 15.01.2025

மண் கல்வி,கலை,இலக்கிய,சமூக சஞ்சிகை - யேர்மனி

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 229




## அனைவருக்கும் இனிதான தைப்பொங்கல் நல் வாழ்த்துகள்!...



| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |